எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல் 08 அதிர்வு 86 ஆவணி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Transco CARGO
We love to deliver
SHIPPING SCHEDULE
Send Your CHRISTMAS GIFTS EARLY

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| AUG 3 | SEP 13 |
| AUG 10* | SEP 20 |
| AUG 17 | SEP 27 |
| AUG 24* | OCT 4 |
| AUG 31* | OCT 11 |
| SEP 7 | OCT 18 |
| SEP 14* | OCT 25 |
| SEP 21 | NOV 1 |
| SEP 28* | NOV 8 |

1300 187 267
TranscoCargo.com.au
*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield




# தசாப்தம் கடந்த அகதிகளின் போராட்டம்!!!

SBK AUTOMOTIVE
எங்கள் சேவைகள்
- காலமுறை பராமரிப்பு
- அனைத்து இயந்திர சேவைகள்
- பயண தகுதி சான்றிதழ்
- டயர் இறக்குமதி

www.sbkautomotive.com.au 41, பிளண்ட்கெட் சாலை, டென்டினொங், VIC 3175 03 9705 0245

EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
DANDENONG
நகை அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
© Bala 0420 877 303
GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day
bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au



# விக்ரமபாகு கருணாரத்ன;

# இலங்கைத்தீவு தோற்கடித்த மனிதன்

சிங்களத் தரப்பிலிருந்து, தமிழ்பேசும் மக்களுடைய உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகப் பொதுவெளியில் குரல் கொடுத்து வந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன (வயது- 81) (Wikramabahu Karunaratne 1943 – 2024) மறைந்து விட்டார். இலங்கைத்தீவை நல்லதொரு அமைதிப் பிராந்தியமாகக் கனவு கண்டவர் விக்கிரமபாகு கருணாரத்ன. இனவாதத்தையும் வர்க்க வேறுபாடுகளையும் நீக்கி விட்டால், அது இயல்பாகவே அமைதிக்குத் திரும்பி விடும். அதற்குப் பிறகு அது தன்னெழுச்சியாகத் தனக்குரிய வளர்ச்சியை நோக்கி விரைவாக மீண்டெழும். தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் இலங்கை மதிப்பும் பொலிவுமுள்ள நாடாக மிளிரும் என்பது விக்கிரமபாகுவின் நம்பிக்கையாக இருந்தது.

உண்மையான இலங்கையர் ஒருவர் விரும்பக்கூடிய, நியாயமான விருப்பங்களும் கனவுகளுமே விக்கிரமபாகு கருணாரத்னவினுடையவை. அவை எளிய கனவுகள்தான். ஆனால் மகத்தானவை. சக மனிதர்களை மதிக்கின்ற, நேசிக்கின்ற பண்பின் அடிப்படையிலானவை. பிறருடைய உரிமைகளைப் பற்றிய புரிதலைக் கொண்டவை. அதனால் அவை மாண்பைக் கொண்ட, அழகான, நியாயமான, அவசியமான, பெறுமதிக்குரிய கனவுகளாகவும் விருப்பங்களாகவும் இருந்தன என்பதால் அவை உலகளாவிய தன்மையைக் கொண்டதாகின.

ஆனால், அவருடைய கனவும் நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் நிறைவேறுவதற்கு முன்பாக அவர் மறைந்து விட்டார். தேசத்தின் எதிர்காலத்தைப்பற்றிய நியாயமான, எளிய, பொதுமைப் பண்புடைய கனவை நிறைவேற்றுவதில் உள்ள இடர்பாடுகளே விக்கிரமபாகு கருணாரத்னவின் தீராத் துயரமாக இருந்தது. இலங்கையின் துயரமும் அதுதான். மெய்யாகவே இலங்கைத்தீவை நேசிப்போரின் துயரமும் அதுதான். ஆகவே நிறைவேறாத நியாயமான கனவுகளின் நாயகனாகவே, எதிர்பார்ப்பாளராகவே விக்கிரமபாகு விடைபெற்றிருக்கிறார் என்றால், அவரை இலங்கைத்தீவு தோற்கடித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். விக்கிரமபாகு கருணாரத்னக்களைப் போன்றோரைத் தோற்கடிப்பதென்பது இலங்கைத்தீவு தன்னைத் தானே தோற்கடிப்பதாகவும் இலங்கையர் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே தோற்கடிப்பதாகவுமே அமையும்.

விக்கிரமபாகு கருணாரத்னவினுடைய மறைவை எளிதில் யாரும் கடந்து செல்ல முடியாது. அப்படி அதை எளிதிற் கடந்து செல்லவும் கூடாது. அப்படிச் செய்தால் மீண்டும் தவறுகளும் பின்னடைவும் ஏற்பட்டே தீரும். அதை நாம் சந்தித்தே ஆக வேண்டியிருக்கும். ஆகவே, அவருக்கான - அவருடைய மறைவுக்கான உயர்ந்த மதிப்பை வழங்க வேண்டும். அதற்கு, அவருடைய வாழ்க்கையை, அவருடைய இலட்சிய நோக்கைப் புரிந்து கொண்டு செயற்படுவதே அவருக்கும் அவருடைய மறைவுக்கும் செலுத்துகின்ற மதிப்பாக இருக்கும். அது வேறொன்றுமல்ல. இலங்கையர்களாகிய நமக்கு நாமே அளிக்கின்ற மதிப்பும் நம்மை ஒளியூட்டிக் கொள்ளுகின்ற முயற்சியுமாகும். ஆம், அது நம்மை விடுவித்துக் கொள்கின்ற சுதந்திர வெளிக்கான பயணமாகும்.

இலங்கைத் தீவை மனிதர்கள் வாழ வேண்டிய தேசமாக உணர்ந்திருந்தார் விக்கிரமபாகு கருணாரத்ன. மனிதர்கள் வாழ வேண்டிய தேசமென்றால், அங்கே அன்பும் கருணையும் சக மனிதர் மீதான நேசமும் சமத்துவப்பண்பாடும் ஜனநாயக அடிப்படைகளும் பேணப்பட வேண்டும். அது இல்லாதபோது அங்கே நம்பிக்கையீனங்களும் பதற்றமும் வன்முறையும் தலையெடுக்கும். இலங்கையில் நிகழ்ந்தது அதுதான். ஒருவரையொருவர் சந்தேகிப்பதும் ஒருவரை ஒருவர் தாக்குவதும் ஒருவரையொருவர் வெறிகொண்டு தோற்கடிக்கும் முயற்சிகளுமே நடந்தன. இன்னும் இந்தப் பழியுணர்ச்சி தீரவில்லை. இதுதான் ஒரு சின்னஞ்சிறிய தீவைப் பெரும்போரில் தள்ளியது. பதிலாக வளங்கள் நிறைந்த அழகிய தேசம் பிச்சைப் பாத்திரமாகியது.

ஆனால், இதைக்குறித்த துக்கமோ வெட்கமோ கவலையோ இலங்கையின் ஆட்சியாளர்களுக்கில்லை. ஆட்சியாளர்களை அரங்கேற்றும் மக்களுக்கும் இல்லை. ஆட்சியாளர்களுக்கு எதிர்த்தரப்பில் உள்ளோரும் தவிர்க்க முடியாமல் இனவாதச் சுழலுக்குள்தான் சிக்குண்டிருக்கிறார்கள். இதுதான் இலங்கையின் மிகப் பெரிய அவலம்.

இதைக்குறித்த துக்கமும் சிங்களச் சமூகத்தின் நீதியற்ற நடத்தை (Behavior) யை, நடவடிக்கையை (Action) குறித்த வெட்கமும் குற்றவுணர்ச்சியும் விக்கிரமபாகுவுக்கு இருந்தது. அதற்கான பிராயச்சித்தத்தைக் காண்பதற்காக அவர் தன்னுடைய இறுதிக்காலம் வரையில் பல வழிகளிலும் பாடுபட்டார். அப்படிச் செய்வது தன்னுடைய கடமை, பொறுப்புணர்வு எனக் கருதினார். இவ்வளவுக்கும் அவர் ஒருபோதும் இனவெறுப்பின் அடிப்படையிலான பாரபட்சத்தையோ குற்றங்களையோ இழைத்தவருமில்லை. அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஆதரவானவரும் கிடையாது. நடைபெற்ற யுத்தத்திற்கு தன்னால் நிதிப்பங்களிப்பைச் செய்ய முடியாதென்று அவர் மேல்மாகாண சபையில் ஆற்றிய உரை நினைவுக்குரியது.

அவருடைய நீதியுணர்ச்சியே அவ்வாறு அவரைச் சிந்திக்கத் தூண்டியது. இங்கே நீதியுணர்ச்சிக்கு, மாண்புக்கு இடமில்லை அல்லவா!

இதனால் சிங்களச் சமூகத்துக்குள் விக்கிரமபாகுவை விலக்கி வைக்கும் போக்கே காணப்பட்டது. அவர் தன்னுடைய சமூகத்திற்குள்ளேயே சந்தித்த நெருக்கடிகளும் சவால்களும் அதிகமாகும். ஆனாலும் அதையிட்டு அவர் வருந்தியதோ தன்னுடைய உறுதியான நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியதோ இல்லை. (இத்தகைய போக்குத் தமிழ்ச் சமூகத்துக்குள்ளும் உண்டு. அதாவது அந்தச் சமூக நிலையைக் கடந்து பொது நிலையில் - பன்மைத்துவ அடிப்படையில் செயற்படுவோரை விலக்கி வைக்கும் போக்கு இது) இனவாதத்தில் ஊறிப்போயிருக்கும் இலங்கையில் இது அபூர்வம். அதிலும் சிங்கள பௌத்த பேரினவாத அரசியலில்.

ஷஇதனாலேயே 2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கருணாரத்தின போட்டியிட்டு 7,055 வாக்குகள் பெற வேண்டியிருந்தது. காரணம், அவருடைய அரசியற் சிறப்பையும் அதன் பெறுமதியையும் அதன் மாண்பையும் சிங்களத்தரப்புப் பெரிதாகக் கண்டு கொள்ளவும் இல்லை. கொண்டாடவும் இல்லை. அப்படிக் கொண்டாடப்பட்டிருந்தால் அவர் ஒரு வெற்றியடைந்த அரசியற் தலைவராக இருந்திருப்பார். அவரைப்போன்றோர் வெற்றியடைந்திருப்பர். அவருடைய அரசியல் இலங்கையில் மாற்றுப் பண்பாடொன்றை உருவாக்கியிருக்கும். இலங்கைத் தீவே இன்று வேறொரு பரிமாணத்தை எட்டியிருக்கும்.

இலங்கைத்தீவு விக்கிரமபாகு கருணாரத்னவைப்போன்ற இடதுசாரிகளைத் தோற்கடித்து , இரத்தம் சிந்த வைக்கும் இனவாதிகளை வளர்த்த பெருமையைக் கொண்டதல்லவா!

ஆனால் தமிழர்கள் விக்கிரமபாகுவை, அவருடைய நீதியுணர்ச்சியை, நியாயத்தன்மையைக் கொண்டாடினார்கள். தமிழர்களிடத்திலே விக்கிரமபாகு கருணாரத்தினவுக்குப் பெரும் மதிப்புண்டு. இந்த அஞ்சலிக்குறிப்புக்கூட அத்தகைய அடிப்படையில்தான் எழுதப்படுகிறது. பாதிக்கப்பட்டோரின் தரப்பிலிருந்து சிந்தப்படும் கண்ணீரையும் அவர்கள் உவந்தளித்த மலர்களையும் விக்கிரமபாகு கருணாரத்ன அஞ்சலியாகப் பெற்றுக் கொண்டார். அதுபோதும் அவருக்கு. அவருடைய கண்ணியத்துக்கு அவை நிறைவளிக்கும். ஆனால், விக்கிரமபாகுவைப்போலச் சிந்திக்கும் தமிழர்களை அது ஏற்றுக் கொள்ளாது. அப்படியான தமிழர்களுக்கு சிங்களத் தரப்பில் மதிப்பிருக்கும். ஆச்சரியமூட்டும் இந்த யதார்த்தத்தை - இந்த உண்மையை நாம் ஆராய வேண்டும்.

******

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின, இலங்கையின் தென்-கிழக்கே லுணுகலை என்ற இடத்தில் பிறந்தவர். பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். ஆரம்பக் கல்வியை மத்துகமையில் கற்ற பின்னர், கொழும்பு ஆனந்தா கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று மின்பொறியியலில் சிறப்புப் பட்டம் பெற்ற அவர், பல்கலைக்கழக மாணவராக இருந்தபோதே அரசியற் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினார்.

1962 இல் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்த விக்கிரமபாகு, 1972 இல் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனாலும், 1972ஆம் ஆண்டில் சமசமாஜக் கட்சி அன்றைய ஆளும் கட்சியாக இருந்த இலங்கை சுதந்திரக் கட்சிக்கும் குடியரசு அரசியலமைப்புக்கும் ஆதரவளித்ததை எதிர்த்துக் கட்சித் தலைமையுடன் முரண்பட்டதால் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.

பின்னர் பொதுநலவாயப் புலமைப் பரிசில் பெற்று கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் சென்று அங்கு, 1970 இல் கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கை திரும்பினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்த விக்கிரமபாகு,பல்கலைக்கழகப் பணியைத் தொடர்ந்தார். ஆனால், அது அவருக்கு இலகுவானதாக இருக்கவில்லை. அவருடைய அரசியல் நிலைப்பாடு அதற்கு நெருக்கடியானது.

1977 ஆம் ஆண்டில் வாசுதேவ நாணயக்கார போன்ற முன்னாள் கட்சி அதிருப்தியாளர்களுடன் இணைந்து நவ சமசமாஜக் கட்சி (புதிய சமூக சமத்துவக் கட்சி) என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார் விக்கிரமபாகு.

இந்தக் காலகட்டத்தில் (1978 இல்) கண்டியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டார் விக்கிரமபாகு. சில மாதங்களில் அவர் விடுவிக்கப்பட்டாலும் கண்காணிப்புத் தொடர்ந்தது. பேராதனைப் பல்கலைக்கழகம் அவரைப் பணியிலிருந்து இடைநிறுத்தியது. ஆனால், அமைச்சரவைத் தீர்மானத்தை அடுத்து சில மாதங்களில் அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

ஆனாலும் அது நீடிக்கவில்லை. 1982 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தேர்தலை நடத்தாமல், சர்வஜன வாக்கெடுப்பைச் செய்ய முயற்சித்தபோது தேர்தலை நடத்தக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமைக்காக மீண்டும் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டார். பின் வந்த நீண்ட காலத்தில் அவர் முழுநேர அரசியற் செயற்பாட்டாளராக இயங்கினார்.

1983 இல் தமிழருக்கு எதிராக நடத்தப்பட்ட இனவன்முறையை அடுத்து இலங்கை அரசு நவ சமசமாஜக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைத் தடை செய்தது. இதனை அடுத்து கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார, ரோகண விஜயவீர போன்ற இடதுசாரித் தலைவர்கள் தலைமறைவாயினர். 1985 ஆம் ஆண்டில் இக்கட்சிகள் மீதான தடை நீக்கப்பட்டதோடு மீண்டும் வெளியரங்குங்கு வந்தார் விக்கிரமபாகு கருணாரத்ன.

1987 லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி ஆகிய கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய சோசலிசக் கூட்டமைப்பு என்ற புதிய இடதுசாரி அரசியல் கூட்டணியை ஆரம்பித்தார் கருணாரத்ன. 1988 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒசி அபேகுணசேகராவுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்தார். இதன்போது டிசம்பர் 02 இல் கொழும்புக்கு அருகிலுள்ள கடவத்தையில் நடத்தப்பட்ட தேர்தல் கூட்டம் ஒன்றை மக்கள் விடுதலை முன்னணியினர் தாக்கியதில் கருணாரத்தின காயமடைந்தார். 1987-89 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது பல இடதுசாரித் தலைவர்கள் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களால் தாக்கப்பட்டனர்.

1998 ஆம் ஆம் ஆண்டில் நவசமாஜக் கட்சி வேறு சில இடதுசாரி சிறு கட்சிகளுடன் இணைந்து இடது விடுதலை முன்னணி (NLF) என்ற புதிய கூட்டணியை ஆரம்பித்தது. 2004 ஆம் ஆண்டு முதல் இக்கூட்டமைப்பு இடது முன்னணி என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இதில் கருணாரத்ன முதன்மைப்பாத்திரமேற்றுச் செயற்பட்டார்.

2001 ஆம் ஆண்டில் மீண்டும் கருணாரத்னவை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவியில் அமர்த்த அன்றைய உயர்கல்வி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பல்கலைக்கழக அதிகாரிகளுக்குக் கட்டளை அனுப்பியிருந்தாலும், அது நிறைவேற்றப்படவில்லை. இறுதியில் 2015 இல் மைத்திரிபால சிறிசேன அவரை மீண்டும் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியில் அமர்த்தினார். கூடவே 1982 ஆம் ஆண்டு முதலான சம்பள நிலுவைப் பணத்தையும் செலுத்த உத்தரவிட்டார்.

சிறந்த கல்வியாளர், சீரிய அரசியற் சிந்தனையாளர், ஒய்வற்ற போராளி, சிறந்த மனிதர் எனத் தன் வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிட்ட விக்கிரமபாகு கருணாரத்னவின் மறைவு வரலாற்றில் நிரப்பக் கடினமான ஒரு வெற்றிடமே. அதிலும் விஷம் நிரம்பிய இனவாதத்தைக் கீழிறக்க வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் விக்கிரமபாகு கருணாரத்ன மறைந்திருப்பது இலங்கைக்குப் பேரிழப்பாகும்.




# ஆஸ்திரேலியா அகதிகளின் திறந்த வெளிச் சிறைச்சாலை!

● ஆர்.சுகந்தன்

இளிமயமாக வானுயர்ந்த கட்டடங்களுக்குள் களியாட்டங்களில் திளைத்திருக்கும் மக்களின் நடுவே பகல் இரவாக விறைந்திருக்கும் ஆஸ்திரேலியாவின் பல நகரங்களில் அகதிகள் இரவு - பகலைக்கடந்து உள்துறை அமைச்சரிடம் நிரந்தரவாழ்வை கோரி நிற்கின்றனர். இந்தப் போராட்டம் 30 நாட்களை கடந்து சென்றுகொண்டிருக்கிறது.

மெல்பேர்ண், சிட்னி ,பிரிஸ்பேர்ன் ஆகிய நகரங்களில் 24 மணி நேர தொடர்போராட்டத்தை ஈரான் மற்றும் ஈழ அகதிகள் முன்னெடுத்து வருகின்றனர். உறங்குவதற்கு கூடாரம் அமைப்பதற்கு மெல்பேர்ண் நகரசபை தடைவிதித்துள்ள நிலையிலும் திறந்த வெளியில் உறக்கத்தையும் தொலைத்து அந்த மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

12 வருடங்களாக நிலையற்ற வாழ்வோடு அல்லலுற்றுக் கொண்டிருந்த இவர்கள் தங்களது எதிர்கால சந்ததியினரின் "அகதி" என்ற அடையாளத்தை துடைத்தெறிய வேண்டும் என இப்போது களத்தில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

ஈழ அகதிகளை பொறுத்தவரை நேற்று , இன்று அகதியாகிப் போனவர்கள் அல்லர். அவர்களில் பலர் 1990 ஆம் ஆண்டு தமிழ் நாட்டுக்கு சென்று அங்கு இந்திய அரசின் அகதிகள் முகாம் , வதை முகாம் என்பவற்றுக்குள் அடைபட்டு, அல்லல் பட்டு நிரந்தர நிம்மதியான வாழ்வை தேடிவந்தவர்களும் உள்ளனர்.

லிபரல் அரசு அகதிகளுக்கான விண்ணப்பங்களை அவசர அவசரமாக விசாரித்து முடித்து அவர்களை இன்று நடு வீதியில் போராட வைத்துள்ளது. அகதிகள் தங்களுடைய அகதிக்கோரிக்கைக்கான விடயங்களை வழங்குவதற்கான கால அவகாசத்தை வழங்கத் தவறியமையே அகதிகளின் இப்போதைய போராட்டத்துக்கு காரணமாக



அமைந்துள்ளது. அரசின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளால் அகதிகள் உளரீதியாக பாதிக்கப்பட்டு, மன உளைச்சலால் இளம் வயதிலேயே உயிரிழக்கும் துயர் சம்பவங்களும் ஆஸ்திரேலியாவில் தொடர்கின்றன.

போராட்டங்களின் ஊடாகவே விசாவை பெற்றுக் கொண்ட வரலாறுகளை நாம் கண்முன்னே கண்டிருப்போம். நாடுகடத்தப்படவிருந்த பிரியா நடேசன் மற்றும் குழந்தைகள் நீண்ட போராட்டத்தின் ஊடாகவே தற்போது நிரந்தர விசாவைப் பெற்றுள்ளனர். அதேபோன்றே நீண்டகாலமாக விசாவின்றித் தவித்த 3 பிள்ளைகளின் தந்தையான நீல் பரா என்று அழைக்கப்படும் நீலவண்ணன், தனியாக நீண்ட நடை நடந்து போராடி தனது குடும்பத்துக்கான விசாவைப் பெற்றுக்கொடுத்திருந்தார். ஆகவே போராட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டுமே தவிர அவற்றை வீரியமற்ற தாக்கக்கூடாது. இந்தப் போராட்டங்களை விமர்சிப்போர் கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப்பார்க்கவேண்டும்.

இதேவேளை,ஆஸ்திரேலியாவில் உள்ள பல தமிழ் அமைப்புகள் நிதி சேகரிப்பில் காட்டும் மும்முரத்தில் சிறு அளவைக்கூட, நாட்டில் தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதில் காட்டுவதில்லை. பிரதி குடிவரவு அமைச்சரின் வாசஸ்தலம் அமைத்தல், 'அதுக்கு இதுக்கு' என்றெல்லாம் பணம் கேட்க செல்லும் தமிழ் அமைப்புகள், அகதிகளின் விடயத்தில் பேசவல்லமையற்ற 'ஊமை'அமைப்புகள் என்பதை அடிக்கடி நினைவுறுத்தி வருகின்றன. 30 நாட்களுக்கு மேல் நடைபெறும் போராட்டத்தில் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளின் தலைக்கறுப்பை கூட காண முடிவதில்லை.

மக்களின் பிரச்சினைகளைப் பேச முனையாதவர்கள் தமிழ் அமைப்புகள் என சொல்லிக்கொள்வதில் அர்த்தம் இல்லை. என்றாலும் இதுவொன்றும் புதிய விடயமல்ல. தமிழ் அமைப்புகளின் சாயம் மக்களிடம் வெளுத்துப் பலநாட்கள் ஆகிவிட்டன.

பாதிக்கப்பட்ட ஏதிலிகள், தமது வாழ்வுக்காகத் தாம் தான் போராட வேண்டும். 12 வருடங்களாக ஆஸ்திரேலியாவின் அகதிச்சிறைக்குள் சிக்குண்டிருக்கும் அவர்களின் வாழ்வுக்கான பாதையை திறக்க ஆஸி.அரசு இந்தப் போராட்டத்தின் பின்னராவது மனம் இளகுமா?

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 84 ஆவணி 2024 தொ.பே:1800 960 162

# ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் பொதுவேட்பாளரும்!

இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப்படும் இலங்கையின் தலைவிதி எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நிர்ணயிக் கப்படவுள்ள நிலையில், அங்கு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வையும் திரும்பியுள்ளது.

தெற்காசிய வலயத்துக்கு மட்டுமல்ல இலங்கையின் அமைவிட மூலபாயமானது பசுபிக் பிராந்தியத்துக்கும் முக்கியத்தும் வாய்ந்தாக அமைந்துள்ளது. எனவேதான் ஏனைய நாடுகளைவிடவும் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் கூடுதல் கரிசனை கொண்டுள்ளன. குறிப்பாக தேர்தல் நிலைவரம் தொடர்பில் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதுவர் பல தரப்பினருடனும் பேச்சு நடத்திவருகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இலங்கைத் தேர்தல் களத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது. இது தொடர்பில் பல கோணங்களில் கருத்தாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

முடியாட்சி முடிந்து குடியாட்சி மலர்ந்ததும் இலங்கையில் பிரதமர் ஆட்சி முறைமையே நிலவிவந்தது. தற்போதைய ஆஸ்திரேலிய ஆட்சி முறைமைக்கு ஒத்த வியூகம் அது. 1978 ஆம் ஆண்டுதான் புதிய அரசமைப்பு இயற்றப்பட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர். ஜயவர்த்தன பதவியேற்றார்.

1982 ஆம் ஆண்டிலேயே முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அந்தத்தேர்தலில் ஆறு வேட்பாளர்கள் களம் கண்டனர். அதில் ஒரேயொரு தமிழ் வேட்பாளராக ஜீ.ஜீ. பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சைக்கிள் சின்னத்தில் களமிறங்கினார்.

இந்தத்தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர். ஜயவர்த்தன 34 லட்சத்து 50 ஆயிரத்து 811 வாக்குகளைப் பெற்ற நிலையில், ஜீ.ஜீ. பொன்னம் பலத்துக்கு ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 934 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. குறிப்பாக தமிழ் வாக்கு வங்கியைக் கொண்ட யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 87 ஆயிரத்து 263 வாக்குகளைப் பெற்று ஜீ.ஜீ. பொன்னம்பலம் முதலிடம் பிடித்தார். வன்னியில் இரண்டாம் இடம். கிழக்கிலும் ஜீ.ஜீ.பொன்னம்பலத் துக்கு பிரதான வேட்பாளர்களைவிடவும் கணிசமானளவு வாக்குகள் கிடைக்கப்பெற்றன. களுத்துறை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில்கூட வாக்குகள் விழுந்தன.

அதன்பின்னர் 1988, 1994, 1999 , 2005, 2010, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றிருந்தாலும் தமிழ் வேட்பாளர் விவகாரம் முக்கியத்துவம் பெறவில்லை. ஓரிரு தமிழ் வேட்பாளர்கள் (சிவாஜிங்கத்தைதவிர) கட்சிகளின் நோக்கங்களை நிறைவேற்றவும், தமது தனிப்பட்ட நலன்களுக்காகவும் (அதாவது டம்மி வேட்பாளர்களாக) களமிறங்கினர்.

ஆனால் இம்முறை இலங்கை அரசியல் களம் மாறுபட்ட கோணத்தில் காணப்படுகின்றது. 'அரகலய' மக்கள் புரட்சி வெடித்த பின்னர் இலங்கை சந்திக்கும் முதல் தேர்தல் இதுவாகும். என்றுமில்லாதவகையில் ஜே.வி.பியினரை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி , மக்கள் மத்தியில் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது. இதனால் ஜனாதிபதித் தேர்தல்களின் போது வழமையாக இரு முனைப் போட்டியைக் கண்ட தேர்தல் களம் இம்முறை மும்முனைப் போட்டியை சந்திக்கவுள்ளது. மறுபுறத்தில் தமிழர் ஒருவரும் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ளமை தென்னிலங்கையிலும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50.1 வீத வாக்குகளை வேட்பாளர் ஒருவர் பெற வேண்டும், இம்முறை ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அப்படியானால் வெற்றிபெற 70 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற வேண்டும்.

இந்த இலக்கை அடைய முடியாது என்பது தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந் திரனை களமிறக்கியுள்ள தரப்புகளும் தெளிவாக தெரியும். எனவே, 'வெல்வதற்காக அல்ல, சில விடயங்களை சொல்வதற்காகவே' எனும் கொள்கையின் அடிப்படையிலேயே தமிழ் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார் . ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களாகக் கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ச போன்றவர்கள் ஒற்றையாட்சிக்குள்தான் அரசியல் தீர்வு காணும் நிலைப்பாட்டில் உள்ளனர். பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பிலும் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை.

தமிழர்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர், எனவே, இது தொடர்பான தெளிவான தகவலை தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும் வழங்குவதற்கே தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒரு குறியீடாக முன்னிறுத்தப்படுகின்றார் என்ற வாதம் நியாயமானதே, சிங்களவர்கள் அல்ல ஒற்றையாட்சி முறைமையே தமிழர்களுக்கு எதிரானது, அதனை தோற்கடிக்க வைக்க வேண்டுமானால் தமிழ்ப் பொதுவேட்பாளர் வெல்ல வேண்டும் என முன்வைக்கப்படும் கருத்திலும் நியாயம் உள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஓரணியில் திரண்டு தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கி இருந்தால் அதற்கு ஒரு முக்கியத்துவம் இருந்திருக்கும். ஆனால் இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மூன்று அணிகளாக பிளவுபட்டுள்ளன. ஒரு தரப்பு தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்கிறது, மற்றைய தரப்பு தென்னிலங்கை வேட்பாளர்கள் பக்கம் நிற்க வேண்டும் என்கிறது, மற்றைய தரப்பு தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்னால் நிற்கின்றது.

இலங்கையில் பேரம் பேசக்கூடிய ஒரு தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே உள்ளது. எனவே, அந்த வாய்ப்பை தமிழ்த் தேசியக் கட்சிகள் உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாறாக வாய்ப்பை தவறாக பயன்படுத்தி மற்றுமொரு அழிவுக்கு வழி வகுக்கக்கூடாது!

# புலம்பெயர்ந்த தமிழரிடையே புரையோடிக் கிடக்கும் சாதிய வன்மம் வேரறுக்கப்படுமா?



கோகுலன், சிட்னி

சமத்துவம், மனித உரிமை மற்றும் சமூகநீதி." இந்த மூன்று வார்த்தைகளை இந்தியச் சூழலில், குறிப்பாக தமிழ்நாட்டில் மிக முக்கியமான இடத்தில் நாம் வைத்திருப்பது அனைவரும் அறிந்ததே! ஆனால், கடல் கடந்து அயல்நாட்டில் குடியேறிய நாட்டில் இந்த வார்த்தைகளின் தேவை என்ன? முக்கியத்துவம் என்ன? அதுவும் வளர்ந்த நாடு எனக் கருதப்படும், அழகிய தீவுக் கண்டமாகிய ஆஸ்திரேலியாவில் இம்மூன்று வார்த்தைகள் எதற்காக பேசப்படுகின்றன? என்ற கேள்விகளை முன்வைத்து, யார் இதைப் பற்றி இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்று விவாதிப்பதை இந்தக் கட்டுரை பதிவு செய்யும் என நம்புகிறேன்.

தெற்காசியாவை விட்டு மேற்கத்திய நாடுகளில் குடிபெயரும் மக்கள் தங்கள் மதங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள், உடை, உணவு, இசை, நடனம், மொழி மற்றும் இலக்கியம் எனப் பலவிதமான கலாசார அடையாளங்கள் மற்றும் பண்பாட்டுக் கூறுகளை தங்களுடன் எடுத்துச் சென்று நடைமுறைப்படுத்து கின்றனர். ஆஸ்திரேலிய நாடு பல்லினக் கலாசாரங்களை மையமாகக் கொண்ட சமூகமாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதை விரும்புவதுடன், புதிதாகக் குடிபெயர்ந்த மக்கள் தனிப்பட்ட ஒரு சாராரின் பிரச்சினை அல்ல. இதன் விளைவுகள் விரிந்து பரவும் தன்மை கொண்டவை. இத்தகைய சூழலில்தான், நம் மக்கள் தங்களது கருத்தியலைச் சீர்தூக்கிப் பார்க்கவும், சமூகச் சிந்தனை உடைய நண்பர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து, சமூகப் பிரச்சினை களை விவாதித்து ஒரு அமைப்பாகச் செயற்படவும் மிகுந்த தேவை உள்ளது.

நவீன காலத்தின் ஏற்றத்தாழ்வுகளைச் சமாளித்து, பாகுபாடுகளைக் குறைத்து, உரிமைகளை நிலைநாட்ட, சரிசமமான வாய்ப்புகளை ஏற்படுத்தி, ஒரு சமத்துவ சமூக மாற்றத்தை உருவாக்க வேண்டும். இதற்கு நாம் மீண்டும் 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் மற்றும் சட்டமேதை 'அண்ணல்' அம்பேத்கர் அவர்களின் சிந்தனைகளைக் கருத்தியல் கருவாக ஏற்று, தற்காலத்திற்கு ஏற்ப சமூகநீதி செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டி, "பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம்" என்ற அமைப்பு ஆஸ்திரேலியாவில் தொடங் கப்பட்டது.




தங்களின் தனித்தன்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு களையும், உரிமைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இவ்வாறு பல நல்ல சமூகக்கூறுகளை இறக்குமதி செய்திருக்கும் ஆஸ்திரேலிய நாடு, புலம்பெயர் மக்களிடையே புரையோடியிருக்கும் சில தீய கூறுகளையும் கையாள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதில் சில முக்கியமான பிரச்சினைகளாக ஏதிலிகளுக்கான விசா உரிமைகள், நிறவெறி மற்றும் இனவெறி சம்பந்தமான வேற்றுமைகள், அரசியல் காழ்ப்புணர்ச்சி போன்றவைகளும் அடக்கம். தற்பொழுது தெற்காசிய மக்களிடம், குறிப்பாக தமிழர்களிடம் பெருவாரியாக பழக்கத்தில் இருக்கும் சாதிய வேறுபாடும், அது சம்பந்தமான தீண்டாமையும் இந்த இனவெறி மற்றும் நிறவெறிப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய காலகட்டத்தை நாம் அடைந் திருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

ஆம் நண்பர்களே, இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம் என இந்து மக்கள் அதிகம் வாழும் பகுதிகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளாக அறியப்பட்ட சாதிய வேற்றுமைகள், தற்பொழுது வெளிநாடுகளிலும் புலம்பெயர்ந்த மக்களிடையே பெரும் வருத்தங்களை விளைவிக்கின்ற, நுண்ணிய ஆழத்தில் நிகழும், பூதாகரமான அளவை அடைந்துள்ளது.

### கருத்தியலும், அமைப்பாதலும்:

மேற்சொன்னவை அனைத்தும் சமூகப் பிரச்சினைகள்

ஆஸ்திரேலியாவின் பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் சமூகநீதி சிந்தனை கொண்ட நண்பர்கள் சிலர் ஒன்றிணைந்து வட்ஸப் குழுவாக கருத்துகளைப் பகிர்ந்து வந்தார்கள். காலத்தின் கட்டாயம் கருதி, சிந்தனைகளைச் செயல்படுத்தும் பொருட்டு, 'பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம்' என்கிற பெயரில், முறையாகப் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனமாக உருவெடுத்திருக்கிறார்கள்.

### திராவிட இயக்கமும், தலித்தியமும்:

பெரியார் மற்றும் அம்பேத்கர் சிந்தனைகள் என்று சொல்லிவிட்டு, திராவிடம் மற்றும் தலித்தியம் என்கிற வலிமை மிக்க வார்த்தைகளைப் புறக்கணித்தல் ஆகாது.

இன்றைய காலகட்டத்தில், திராவிட இயக்கமும் தலித்தியமும் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டுவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை மற்றும் கல்வி மேம்பாடு ஆகியவற்றை பெரியார் வலியுறுத்தினார்.

பி.ஆர். அம்பேத்கர் தலித்தியத்தின் முன்னோடி மட்டுமல்ல, அவர் இந்திய அரசியல் களத்தில் சாதி அடிப்படையிலான ஒடுக்குமுறைக்கு எதிராகத் தனி ஆளாகப் போராடினார். அவர் தலித் சமூகத்தின் உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பல்வேறு முயற்சிகளை

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# புலம்பெயர்ந்த தமிழரிடையே புரையோடிக் கிடக்கும் சாதிய வன்மம் வேரறுக்கப்படுமா?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார். எனவேதான், பெரியாரும் அம்பேத்கரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம். இருவரும் சாதி ஒழிப்பு, சமத்துவம், மற்றும் சமூக நீதிக்காகப் போராடியதால், அவர்கள் கருத்துகள் மற்றும் செயற்பாடுகள் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தன.

**நல்ல ஆரம்பம்:**

PATC-A அமைப்பின் தொடக்க விழா இணைய வழியாகவும், சிட்னி நகரில் ஒரு சிறிய விழாவாகவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. சாதி ஒழிப்பு, சமத்துவம் மற்றும் சமூகநீதி என்கிற இலக்கை நோக்கிப் பயணிக்கும் திராவிட இயக்க, தலித்திய இயக்க மற்றும் இன்னபிற கருத்தியல் தளத்தில் பயணிக்கும் பல நண்பர்கள் கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகத்தின் தலைவர் திருமிகு. ஆசிரியர் கி. வீரமணி அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர், எழுச்சித் தமிழர் திருமிகு டாக்டர். தொல். திருமாவளவன் அவர்களும் இணைய வழியாகத் தலைமை உரை ஆற்றினார்கள். சாதி ஒழிப்பில் நாம் எட்ட வேண்டிய தூரம் நீண்ட கடினமான பயணம் என்பதையும், வலதுசாரி பிரிவினைவாதிகள் நடத்தும் தாக்குதல்களைப் பற்றியும், அடுத்த தலைமுறையினரை நாம் சமத்துவம் நிறைந்த, சரிசமமான வாய்ப்புகள் கிடைக்கின்ற சமூக மாற்றத்தை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தங்களது உரைகளில் விளக்கினார்கள்.

திராவிடர் கழகத்தின் போர்வாள், வழக்கறிஞர். திருமிகு. அருள்மொழி அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். ஆஸ்திரேலியாவில் கிரீன்ஸ் கட்சியின் மூத்த உறுப்பினர், மனித உரிமைப் போராளி மற்றும் முன்னாள் செனட்டர் திருமிகு. லீ ரையானன் அவர்களும் முக்கியமான உரையாற்றினார். மதுரையின் மைந்தன் எழுத்தாளர் திருமிகு. அ. முத்துக்கிருஷ்ணன் அவர்களும் தனது இணையவழி வாழ்த்துரையில், சாதியை நம் சமூகத்தில் இருக்கும் ஒரு நோய் விளைவிக்கின்ற வைரஸ் என்கிற உவமையில் விளக்கினார். சிட்னியில் வசிக்கும் ஈழத்தமிழர் லேபர் கட்சியின் முக்கியமான தமிழ் உறுப்பினர் மற்றும் விரிவுரையாளர் திருமிகு. துர்கா ஓவன், கோவையைச் சேர்ந்த எழுத்தாளர் திருமிகு. இரவிச்சந்திரன் அரவிந்தன் அவர்கள், சிட்னியின் முக்கியமான ஊடகவியலாளர் திருமிகு. ரைசல் அவர்கள் மற்றும் எழுத்தாளர் திருமிகு. கார்த்திக் வேலு அவர்கள், சிட்னிவாழ் ஈழத்தமிழர் மற்றும் கம்பர்லேண்ட் கவுன்சில் கிரீன்ஸ் கட்சி வேட்பாளர் திருமிகு. சுஜன் செல்வன், சிட்னிவாழ் தொழில்முனைவோர் திருமிகு. கார்த்திகா அவர்கள், சிட்னியில் வசிக்கும் கண்டியைப் பூர்வீகமாகக் கொண்ட மலையகத்தமிழர் திருமிகு. சுந்தர் அவர்கள் மற்றும் பல முக்கியமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

**சமீபத்திய சாதனை:**

ஆஸ்திரேலியா பெரியார் அம்பேத்கர் சிந்தனை (PATC-A) வட்டத்தின் நிர்வாகக் குழுவினர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஒரு பெரும் பணியை அறிவுசார் தளத்தில் சமீபத்தில் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

பெரியார் வாழ்க, அம்பேத்கர் வாழ்க என்று வெறும் பேச்சில் மட்டும் கூச்சல் இல்லாமல், சாதிய அடக்குமுறைகளை ஆஸ்திரேலிய பல்லின மக்களுக்குப் எவ்வாறு புரிய வைப்பது?, ஏற்கனவே கலாசாரம், ஆன்மீகம் என்கிற போர்வையில் உலாவரும் சாதிய பழக்கவழக்கங்களை, தினசரி வாழ்வியலில் ஊடுருவி நிற்கும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவிக்கும் மன அழுத்தங்களை எவ்வாறு வெளிச்சத்திற்கு கொண்டுவருவது?, மேலும் நிறவெறி மற்றும் இனவெறி குற்றங்களுக்கு எதிரான சட்டங்களில் சாதிய அடக்குமுறைகளை எவ்வாறு இணைப்பது? என்று பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சிகளையும் மற்றும் கலந்துரையாடல்களையும் கடந்த ஆண்டில் நடத்தினார்கள்.

அதன் விளைவாக, Federation of Ethnic Communities Councils of Australia என்கிற அமைப்புடன் இணைந்து, ஆஸ்திரேலிய அளவில் இனவெறிக்கு எதிரான தேசியக் கட்டமைப்பில் (National Anti Racism Framework) சாதிய அடக்குமுறைகளை சேர்ப்பதற்கான முயற்சியில், சிட்னிப் பகுதியில் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, சமூகவியல் ஆராய்ச்சி துறையில் வேலை செய்யும் பேராசியர் செல்வராஜ் அவர்கள் தலைமையில் அறிக்கை ஒன்றை அரசாங்கத்திடமும், அரசியல் பிரமுகர்களிடமும் அளித்தனர்.

இந்தியா மட்டுமல்லாது, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமை முக்கியத்துவம் வாய்ந்தது.

**தொடரும் பிரதான பணிகள்:**

1. ஆஸ்திரேலிய அளவில் சாதிய அடக்குமுறை பற்றிய விழிப்புணர்வு, .
2. பெரியார் மற்றும் அம்பேத்கர் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவது,
3. சமூகத்தில் உள்ள கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள், மதம் சார்ந்த மூட நம்பிக்கைகள் பற்றி விவாதிக்கவும், தீர்வுகளைக் கண்டறியவும் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பது,
4. சாதிய அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடுக்க, சட்ட ரீதியான வழிமுறைகளை உருவாக்குவது மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து தீர்மானங்களை ஏற்படுத்த வழிவகுப்பது,

என்று, புலம்பெயர்ந்த மக்களிடையே சாதிய அடிப்படையிலான பாகுபாடுகளைக் குறைத்து, சமத்துவமான சமூகத்தை உருவாக்க தங்களது பங்களிப்பை ஆஸ்திரேலியாவின் பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டத்தின் உறுப்பினர்கள் செய்து வருகின்றனர்.

சமத்துவம், மனித உரிமை மற்றும் சமூகநீதி பெறுவதற்கான பாதையில் ஒரு சமூக மாற்றம் நம்மிடையே நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது கண்கூடு.

மனிதம் ஓங்குக!
சுயமரியாதை வளர்க!
ஆதிக்க மனப்பான்மை ஒழிக!
தமிழ் வெல்க!!

ஹோம்புஷின் எதிர்காலத்தைப் பற்றி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்

NSW GOVERNMENT




ஹோம்புஷுக்கான திட்டங்கள் குறித்த உங்கள் கருத்தைத் திட்டமிடல், வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்புத் திணைக்களம் வரவேற்கிறது.

போக்குவரத்து சார்ந்த மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தப் பகுதியில் நிலத்தை மறுசீரமைப்பதற்கானத் திட்டங்களை நாங்கள் வெளியிடுகிறோம்.இந்த மறுசீரமைப்பானது பின்வருவனவற்றை வழங்கிட உதவும்:

- **16,100 வரையிலான புதிய வீடுகள்**
- **5% முதல் 10% மலிவு விலை வீடுகள்**
- இப்பகுதியில் **2,670 வரையிலான புதிய வேலைகள்**
- **புதிய திறந்தவெளி இடங்கள், பூங்காக்கள், நடைபாதைகள் மற்றும் சைக்கிள் பாதைகள்** போன்றவற்றுக்கான சாத்தியக்கூறுகள்..

**16 ஆகஸ்டு 2024 அன்று மாலை 5 மணிக்குள் உங்கள் கருத்தைத் தெரிவிக்கவும்**

மேலும் அறிந்துகொள்ள மற்றும் கருத்துத் தெரிவிக்க க்யூ.ஆர் குறியீட்டை (QR code) அலகீடு (scan) செய்யவும்.
**planning.nsw.gov.au/homebush**



# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# வெல்லப்போவது யார்?






● எஸ்.டிலக்ஷன்

இலங்கையின் தலைவிதி எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நிர்ணயிக்கப்படவுள்ளது. 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில் இலங்கையில் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

ஒகஸ்ட் 14 ஆம் திகதி நண்பகல்வரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மறுநாள் 15 ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறும். வேட்பு மனுத் தாக்கலின் பின்னர் பிரதான வேட்பாளர்கள் ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர். ஒகஸ்ட் 16 ஆம் திகதி முதல் பரப்புரை போர் ஆரம்பமாகும்.

## ஜனாதிபதி தேர்தல்களும் வேட்பாளர்களும்

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கின்ற தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் கருதப்படுகின்றது. 1978 அரசமைப்பு ஊடாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜயவர்த்தன பதவி வகித்தார்.

முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தல் 1982 இல்தான் நடைபெற்றது. அந்தத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜே.ஆர். ஜயவர்த்தன, சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பேகடுவ, ஜே.வி.பி. சார்பில் ரோஹண விஜேவீர, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், லங்கா சம சமாஜக் கட்சி சார்பில் கொல்வின் ஆர் .டி .சில்வா, நவ சமசமாஜக் கட்சி சார்பில் வாசுதேவ நாணயக்கார ஆகிய 6 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. கடைசியாக 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

தேர்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருந்தால் கட்சி சார்பில் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம். சுயேச்சையாக போட்டியிடுவதாக இருந்தால் நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இருந்திருக்க வேண்டும். வயது, இலங்கைப் பிரஜை உட்பட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு மேலும் சில தகைமைகளும் உள்ளன. அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்காவிடின் வேட்பு மனு நிராகரிக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருந்தால் 50 ஆயிரம் ரூபாவும், சுயேச்சையாக போட்டியிடுவதாக இருந்தால் 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கட்டுப்பணத் தொகை குறைவாக இருப்பதால் அரசியல் நோக்கங்களுக்காகவும், இதர தேவைகளுக்காகவும் பிரதான கட்சிகளால்'டம்மி' வேட்பாளர்கள் களமிறக்கப்படும் நிலையும் காணப்படுகின்றது.

ஊடகப் பிரசாரத்தை பெற்றுக்கொள்ளுதல், தேர்தல் ஆணைக்குழுவால் வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை கட்சிகளுக்கு பெற்றுக்கொள்ளுதல், எதிர் வேட்பாளர்களுக்கு சேறுபூசுதல், மக்களை திசை திருப்பல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக பிரதான கட்சிகளால் இவ்வாறு டம்மி வேட்பாளர்கள் களமிறக்கப்படும் அசிங்கமான அரசியல் கலாசாரம் இலங்கையில் உள்ளது.

## பிரதான வேட்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்கள், பிரதான வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கோருவதும், இறுதி நேரத்தில் தேர்தலில் இருந்து ஒதுங்கும் சம்பவங்களும் நடந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்குச் சீட்டு அச்சிடுதல் உட்பட தேர்தலுக்கென அதிக செலவு ஏற்படுகின்றது. வாக்குச் சீட்டு நீள்வதால் மக்களுக்கான தேர்வு சுதந்திரத்திலும் இடையூறு ஏற்படுகின்றது.

இம்முறையும் 30 க்கும் மேற்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒகஸ்ட் 8ஆம் திகதிவரை 28 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். எதிர்வரும் 14 ஆம் திகதிவரை அவகாசம் இருப்பதால் அந்த எண்ணிக்கை 30 ஐ தாண்டும் என்றே தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றது.

இவ்வாறு பலர் போட்டியிட்டாலும் பிரதான வேட்பாளர்களாக சிலரே கருதப்படுகின்றனர்.

சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையிலேயே மும்முனைப் போட்டி நிலவுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் களமிறங்கியுள்ள நாமல் ராஜபக்ச, சர்வஜன அதிகாரம் சார்பில் போட்டியிடும் திலித் ஜயவீர, தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடும் விஜயதாஸ ராஜபக்ச, மக்கள் போராட்ட முன்னணி சார்பில் போட்டியிடும் சட்டத்தரணி நுவான் போபகே, சுயாதீன வேட்பாளராக போட்டியிடும் சரத் பொன்சேகா ஆகியோரும் ஜனாதிபதி தேர்தல் களத்தில் பேசப்படும் நபர்களாக உள்ளனர்.

இதில் குறிப்பாக சரத் பொன்சேகா மற்றும் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் சஜித் பிரேமதாஸவுக்கான வாக்கு வங்கியைச் சிதைக்கும் நோக்கில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திட்டமிட்ட அடிப்படையில் களமிறக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு உள்ளது. 'றோ'வின் ஆசியுடன்தான் பொன்சேகா போட்டியிடுகின்றார் எனவும் கூறப்படுகின்றது. சில நாட்களுக்கு முன்னர்கூட பொன்சேகா டில்லி சென்றிருந்தார், இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் உட்பட இராஜதந்திர அதிகாரிகள் சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

பொன்சேகா போட்டியிட்டாலும் அல்லது பின்வாங்கினாலும் அதன் பின்னணியில் நிகழ்ச்சி நிரலொன்று நிச்சயம் இருக்கும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தமிழ் எம்.பிக்களின் நிலைப்பாடு?

இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான், வியாழேந்திரன், ஜீவன் தொண்டமான் உட்பட 9 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், சஜித்துக்கான ஆதரவை வெளிப்படுத்தி இருந்தாலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் பக்கம் தாவுவதற்குரிய சாத்தியம் இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் முயற்சியால் தமிழ்ப் பொதுவேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் களமிறக்கப்பட்டுள்ளார்.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்திருந்தாலும், அந்தக்கட்சி உறுப்பினரான வினோநோகராதலிங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். புளொட் சித்தார்த்தன் தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியில் பங்கேற்றுள்ளார். அந்தவகையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பக்கம் நான்கு தமிழ் எம்.பி.க்கள் உள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு எம்.பி,க்களும், ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதற்கு அறைகூவல் விடுத்துள்ளனர். எனினும், ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பதென தமிழரசுக் கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் முடிவெடுக்கவில்லை.

ஸ்ரீங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தெரிவான அங்கஜன் ராமநாதனும் தான் யாருக்கு ஆதரவு என்பதை இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

## வாக்காளர்களின் எண்ணிக்கை

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 17 லட்சத்து 65 ஆயிரத்து 351 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 18 லட்சத்து 81 ஆயிரத்து 129 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 10 லட்சத்து 24 ஆயிரத்து 244 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்.. தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 93 ஆயிரத்து 187 பேரும் (யாழ். - 492,280, கிளிநொச்சி 100, 907) வன்னி மாவட்டத்தில் 3 லட்சத்து 6 ஆயிரத்து 81 பேரும் ( வவுனியா 128,585, மன்னார் 90,907, முல்லைத்தீவு 86,889) வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 லட்சத்து 49 ஆயிரத்து 686 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 432 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 3 லட்சத்து 15 ஆயிரத்து 925 பேரும் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

இம்முறை தென்னிலங்கையில் மும்முனை போட்டி நிலவும் என்பதால் வடக்கு, கிழக்கு வாக்குகள் தீர்மானிக்கும் சக்தியாக அமையும். இந்நிலையில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டுள்ள விடயம் பிரதான கட்சிகளைக் கிலிகொள்ள வைத்துள்ளது.

## கூட்டணிகள்

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணி ஒகஸ்ட் 08 ஆம் திகதி உதயமானதுடன், கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, சுதந்திரக் கட்சியின் தயாசிறி அணி என்பன கூட்டணியில் இணைந்து, கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவை உறுதிப்படுத்தின.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவும் இந்தக்கூட்டணியில் இணைந்துள்ளார். மேலும் சில கட்சிகளும், சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் கூட்டணியில் இணைந்துள்ளன. எனினும், சஜித்துடன் கூட்டணி வைத்திருந்த ரிஷாட் பதியுதீன் கூட்டணியில் இணையவில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவரது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இன்னும் முடிவெடுக்கவில்லை.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பலமான கூட்டணியை அமைத்துள்ளது. முன்னாள் படை அதிகாரிகள், அரச ஊழியர்கள் என பலரும் அந்தக்கூட்டணியுடன் இணைந்து பயணித்துவருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ள தரப்புகளின் கூட்டணியும் விரைவில் மலரவுள்ளது.

கடும்போக்குடைய சிங்கள தேசிய வாத கட்சிகளும், அமைப்புகளும் இணைந்தே சர்வஜன அதிகாரம் எனும் கூட்டணியை உருவாக்கியுள்ளன. விமல்வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் இக்கூட்டணியிலேயே அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றி யாருக்கு?

தற்போதைய கருத்து கணிப்புகள் மற்றும் உளவு தகவல்களின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாச முன்னிலையில் இருக்கின்றார், 2ஆவது இடத்தில் அநுரகுமார திஸாநாயக்க உள்ளார், ஆனால் முன்பு இருந்ததைவிடவும் ஜனாதிபதி ரணிலுக்கான மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது. எனவே, அவரின் பிரசார வியூகத்தை பொறுத்து அவர் மேலும் முன்னேறக்கூடும் எனத் தெரிய வருகின்றது.

# ஆடிப்பிறப்பு விழா -2024




கேசி தமிழ் மன்றத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் ஆடிப்பிறப்பு விழா இம்முறை Springvale நகர மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
இந் நிகழ்வின் சில படங்களை காணலாம்.













# ஆஸ்திரேலியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்!

இஸ்ரேல் மீது ஈரான் மற்றும் அதன் ஆதரவு பெற்ற அமைப்புகள் தாக்குதல் நடத்தலாம் என்ற எச்சரிக்கையால் மத்திய கிழக்கை போர் மேகங்கள் சூழ்ந்துகொண்டுள்ளன. இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈராண்டுகளுக்கு பிறகு பயங்கரவாத எச்சரிக்கை நிலை, “சாத்தியம்” என தரநிர்ணயப்படுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பான தகவலை ஆஸ்திரேலியப் பிரதமரும்உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு உடனடியாக பாரியளவிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லை என்றபோதிலும் முன்னாயத்த நடவடிக்கையாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என உளவுப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் - ஹமாஸ் போரால் ஆஸ்திரேலியாவில் சமூக ஒற்றுமை சீர்குலைந்துள்ளது. இந்நிலையிலேயே 2022 க்கு பிறகு, பயங்கரவாத அச்சுறுத்தல், ‘சாத்தியம்’ என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. “உடனடி அச்சுறுத்தல், ஆபத்து இல்லை என்றாலும் விழிப்புடன் இருக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.” எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். பயங்கரவாத அச்சுறுத்தல் தன்மையானது, பாதுகாப்பு அதிகாரிகளால் ஐந்து நிலைகளில் மதிப்பிடப்படுகின்றது. அதில் ஒன்றே ‘சாத்தியம்’ என்ற மதிப்பீடாகும். இதன்படி வன்முறை மற்றும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு சாத்தியம் இருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் நம்புகின்றனர்.

அதேவேளை, பயங்கரவாத அச்சுறுத்தல் அளவு விவகாரத்தில் பிரதமர் அரசியல் நடத்த முற்படுகின்றார் என்று கிறீன்ஸ் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளார். இவ்விவகாரம் கவனமாகக் கையாளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். மத்திய கிழக்கில் உடனடிப் போர் நிறுத்தத்தை ஆஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




### வடகொரியத் தலையிடிக்கு தென்கொரியத் தைலம்

ரஷ்யா மற்றும் வடகொரியாவுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் பிராந்தியத்தை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களை அப்பட்டமாக மீறுவதாகவும் ஆஸ்திரேலியா சுட்டிக்காட்டியுள்ளது.

வடகொரிய ஜனாதிபதி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் கடந்த ஜுன் மாதம் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமது நாட்டுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டால் இராணுவ உதவியை வழங்க ரஷ்யாவும், வடகொரியாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் பீதியடைந்துள்ளன.

இந்நிலையிலேயே குறித்த திட்டம் தொடர்பில் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் ஆஸ்திரேலியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவு பலப்படுத்தப்படும் என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளார். ஜப்பானில் நடைபெற்ற ’குவாட்’ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்றிருந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், அங்கிருந்து தென்கொரியாவுக்கு சென்றிருந்தவேளையிலேயே இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப்பயணத்தின்போது தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கிய பிரமுகர்களுடன் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பூர்வக்குடி மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

ஆஸ்திரேலியாவில் பூர்வகுடிமக்களின் எண்ணிக்கை முதன் முறையாக ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது.

ஆஸ்திரேலிய புள்ளியியல் திணைக்களத்தின் தரவுகளின்படி 2022ஆம் ஆண்டிலேயே இந்த இலக்கு எட்டப்பட்டுவிட்டதாகவும், பிரிஸ்பேன் மற்றும் பேர்த் ஆகிய பகுதிகளில் அடுத்த ஏழு ஆண்டுகளில் பூர்வக்குடி மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பிறப்பு வீதம் வீழ்ச்சி கண்டுள்ள போதிலும் பூர்வகுடி மக்கள் மத்தியில் சனத்தொகை வளர்ச்சி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதன்படி 2031 ஆம் ஆண்டளவில் பூர்வகுடி மக்களின் எண்ணிக்கை 1.2 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### உயிர் குடிக்கும் விபத்துகள்

ஆஸ்திரேலியாவில் வீதி விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், சாரதிகளுக்கு கட்டாயம் பயிற்சி மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் கடந்த வருடம் மாத்திரம் ஆயிரத்து 310 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீத அதிகரிப்பாகும். இதன்படி சராசரியாக ஒவ்வொரு எட்டு மணிநேரத்துக்கும் வீதி விபத்தால் ஒருவர் பலியாகும் பேரவலம் தொடர்கின்றது.

குறிப்பாக வீதி விபத்துகளில் பலியாகும் சிறார்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது.

கடந்த வருடம் வீதி விபத்துகளில் உயிரிழந்தவர்களில் 531 பேர் சாரதிகள், 218 பேர் பயணிகள் மற்றும் 155 பேர் பாதசாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா ஆகிய மாநிலங்களில் வீதி விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

### கஞ்சா மீது காதல்

ஆஸ்திரேலியாவில் Methamphetamine, Cocaine மற்றும் கஞ்சா ஆகிய சட்டவிரோத போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன், சட்டவிரோத போதைப்பொருள் பாவனையில் கஞ்சா தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகின்றது.

ஆஸ்திரேலிய குற்றவியல் புலனாய்வு ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத போதைப்பொருள் அதிகம் பயன்படுத்தப்படும் 34 நாடுகளின் பட்டியலில் ஆஸ்திரேலியா 4 ஆவது இடத்தில் உள்ளது.

ஆஸ்திரேலியர்கள் கஞ்சாவையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அதிகளவு கஞ்சா நுகரப்படும் 20 நாடுகளில் ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

Cocaine போதைப்பொருள் பாவனையில் 32 நாடுகளில் ஆஸ்திரேலியா 20 ஆவது இடத்தில் உள்ளது.

குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா ஆகிய மாநிலங்களிலேயே Methamphetamine அதிகம் நுகரப்படுகின்றது.

### மன்னிப்பால் மகிழ்ச்சி

ஆஸ்திரேலியக் காவல்துறையின் செயற்பாடுகளால் பூர்வகுடி மக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பில் ழேசவாநசபெ வுநசசவைழசல காவல்துறை ஆணையாளர் பூர்வகுடி மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதை பூர்வகுடி மக்கள் நலன்சார் அமைப்புகள் வரவேற்றுள்ளன. இது புதிய விடியலுக்கான ஆரம்பமாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற புயசஅய விழாவில் உரையாற்றிய காவல்துறை ஆணையாளர் ஆஉைாயநட ஆரசிால, கடந்த 154 ஆண்டுகளாக காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு, பூர்வகுடி மக்களிடம் மன்னிப்பு கோரினார்.

“காவல்துறை ஆணையாளர் மன்னிப்புக் கோரியதை வரவேற்கின்றோம், இனவெறி நிறுத்தப்பட வேண்டும், மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.” - என்று பூர்வகுடி தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

பூர்வகுடி மக்கள் தொடர்பான Makarrata உண்மை ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பான உறுதிமொழியை மத்திர அரசு கைவிடவில்லை என்று புதிய பூர்வகுடி அமைச்சர் Malarndirri ஆஉஊயசவால தெரிவித்தார்.

ழேசவாநசபெ வுநசசவைழசல நடந்த புயசஅய திருவிழாவில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர் Anthony Albanese மேற்படி உறுதிமொழியில் இருந்து பின்வாங்கினார் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்தநிலையிலேயே பிரதமரின் கருத்து தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது எனவும், குறித்த ஆணைக்குழுவை அமைப்பதில் அரசு உறுதியாக உள்ளது எனவும் பூர்வகுடி அமைச்சர் குறிப்பிட்டார்.

பூர்வகுடி மக்கள் தொடர்பில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியடைந்த நிலையில், அடுத்தகட்ட நகர்வுகள் பற்றிய கருத்தாடலை உருவாக்குவதற்கான வாய்ப்பாக அமைந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ஏழு இஸ்ரேலியர்களுக்கு பயணத்தடை

மேற்குக் கரையில் பாலஸ்தீனர்கள்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட ஏழு இஸ்ரேலியர்கள்மீது ஆஸ்திரேலியா பொருளாதாரம் மற்றும் பயணத் தடைகளை விதித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் சர்வதேச சட்டத்துக்கு முரணானது எனவும், மத்திய கிழக்கில் நீடித்த அமைதிக்கு அது தடையாக இருக்கும் எனவும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவேதான் பாலஸ்தீனர்களுக்கு எதிராக குடியேற்ற வன்முறை, தாக்குதல் மற்றும் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட மேற்படி நபர்களுக்கு எதிராக பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறான வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தரப்புகளுக்கு எதிராக இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

# எல்லா மருத்துவர்களும் மாபியாக்கள் இல்லை!

## குறைந்த வளத்தை வைத்து நிறைவான சேவையை வழங்குவதே என் இலக்கு

**Dr. த. சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனை)**



Dr. த. சத்தியமூர்த்தி, இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் மிக அர்ப்பணிப்பான மருத்துவ சேவையை வன்னிப் பகுதியில் தலைமையேற்று மிகக்குறைந்த ஆளணி, குறைந்த மருத்துவ வசதிகள், வளங்களோடு ஆற்றியவர். இதனால் பல்லாயிரக்கணக்கானோரின் உயிரைப் பாதுகாத்திருக்கிறார். இதைப் பாராட்டி மதிப்பளிக்கும் விதமாக “Interaction” Worldwide NGO Consortium வழங்கிய “மனிதநேய மருத்துவப் பணிக்கான விருது” வைத்தியக் கலாநிதி சத்தியமூர்த்திக்கு 2010 இல் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் வழங்கப்பட்டது. 2018 இல் நேர்மைக்கான மகுடம் விருதினைப் பெற்றார்.

இறுதிப் போருக்கு முன்னும் பின்னுமாக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளில் பணிப்பாளராகப் பணியாற்றிய Dr.த.சத்தியமூர்த்தி, 2015 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராகப் பணியாற்றி வருகிறார். இந்தக் காலகட்டத்தில் போதனா மருத்துவமனை மிகத் துரிதமான அபிவிருத்தியைப் பெற்றுள்ளது. முன்னரை விட நோயாளர் விடுதி வசதி, மருத்துவர்கள், தாதியர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு, விபத்துச் சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல புதிய சிகிச்சைத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இன்னும் பல தேவைகளும் பற்றாக்குறைகளும் உள்ளது என்பது பல தரப்பினருடைய கவனமாகவும் விமர்சனமாகவும் உள்ளது. இவற்றைக் குறித்து எதிரொலிக்காக Dr. த. சத்தியமூர்த்தி அவர்களுடன் நடத்திய உரையாடல் இங்கு பிரசுரமாகின்றது.

**நேர்காணல் - கருணாகரன்**

**கேள்வி: யுத்த காலத்தையும் விட இப்போது வடக்கில் மருத்துவத்துறை கடுமையான விமர்சனத்தைச் சந்தித்திருப்பதற்கு உண்மையான காரணங்கள் என்ன?**

பதில்: யுத்த காலத்தில் மருத்துவ வசதிகளுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவியது. ஆனாலும் அங்கு கடமையாற்றியவர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இருப்பினும் பலர் தங்கள் உறவினரின் கண்முன்னே இறந்தனர். இறப்பு என்பது போரின் காரணமாக சாதாரணமாக - தவிர்க்கப்படமுடியாதவாறு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகியது. உயிரைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் பல பாதுகாப்பு முறைமைகளைக் கடைப்பிடித்தார்கள்.

ஆனால் தற்போது அதிகரித்த ஆடம்பர வாழ்க்கை முறைமை, ஆசை, தொற்றா நோய்கள், விபத்து எனப் பல காரணங்களால் தவிர்க்கப்பட வேண்டிய இறப்புகள் நடைபெறுகின்றன. ஆனாலும் வைத்திய சேவையில் ஏற்படுகின்ற குறைபாடுகளை மக்கள் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை. கோவிட் (Covid) தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னராக சுகாதார சேவையில் ஏற்பட்ட மருந்து வழங்கலுக்கான தடங்கல் மற்றும் ஆளணிகள் நியமிக்கப்படாமை சுகாதார சேவையில் கணிசமான பலவீனத்தை ஏற்படுத்தியது. அத்துடன் கடமையில் இருந்தவர்களில் ஒரு சிலரின் கவனக் குறைவால் ஏற்பட்ட விளைவுகள் மருத்துவத் துறையில் மக்களுக்குப் பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களினால் ஒரு சில உண்மைகள் கூறப்பட்டாலும் உண்மைக்கு புறம்பான பல தகவல்களும் பொது மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. இவற்றைப் பகுத்தறிய முன்வர வேண்டும்.

**கேள்வி: இந்த விமர்சனங்களை அல்லது குற்றச்சாட்டுகளைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன? குறிப்பாகச் சுகாதார அமைச்சு, மாகாணசபை நிர்வாகம், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொறுப்பு வைத்தியர்கள் எனப் பொறுப்பு மிக்க இந்த அடுக்கில் எந்த அளவுக்கு அக்கறை எடுக்கப்பட்டிருக்கிறது?**

பதில்: எழுத்து மூலமாக குற்றச்சாட்டுகள் சுகாதாரத் திணைக்களத்தில் அல்லது சுகாதார அமைச்சில் சமர்ப்பிக்கப்படுகின்றபோது உடனடியாக தற்காலிக விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அந்த முடிவுகள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டு மீண்டும் முறையான விசாரணை ஒன்று செய்யப்படும். கடந்த காலங்களிலும் இவ்வாறான விசாரணைகள் நடைபெற்றுள்ளன. இப்போதும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் விசாரணைகள் காலதாமதமாவதனால் பொது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். ஆகவே இது விடயமாக கூடிய கரிசனையைச் செலுத்தி விரைவாகத் தீர்வுகளை வழங்க வேண்டும். ஆனால் அதிகரித்த விமர்சனங்களைக் குற்றச்சாட்டுகளாக ஏற்று சுகாதார அமைச்சு விசாரணை செய்வது இயலாத விடயம். ஆகவே குறைபாடு ஏற்படுகின்றபோது அதனை உரிய முறையில் தெரிவித்து அதற்கான நிவாரணங்கள் வரும்வரை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி: இந்த விமர்சனங்கள் தொடர்பாக மருத்துவ வட்டாரங்களில் உள்ள அபிப்பிராயம், உளநிலை மற்றும் நிலைப்பாடு என்னவாக உள்ளது?**

பதில்: தவறுகள் கட்டாயம் சுட்டிக்காட்டப்பட வேண்டும். அவை பின்னாளில் ஏற்படாத வகையில் திருத்திக் கொள்வதற்கு மிக முக்கியமானது. ஆனால் அனைவரையும் விசாரணைக்கு முன்னரேயே குற்றவாளியாகச் சித்தரிப்பது சுகாதாரக் கடமையில் இருப்பவர்களுக்கு பெரும் மனச்சோர்வையும் தொழிலில் வெறுப்பையும் ஏற்படுத்தும். இலங்கை போன்ற நாடுகளில் பல பற்றாக்குறை, வசதிகள் இன்மை காரணமாக சேவைகளை வழங்குவதில் உத்தியோகத்தர்கள் கடும் சவால்களை எதிர்கொள்ளுகின்றார்கள். குறிப்பாக கோவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற இடர்கள் சுகாதார சேவையில் பலவீனத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. அது இப்போது ஓரளவு சீர் செய்யப்பட்டு வரும் நிலையில், மீண்டும் சுகாதாரக் கடமையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் மீது அளவுக்கதிகமான விமர்சனங்கள் வருமானால் இந்தச் சேவையை அவை நிச்சயமாக பலவீனப்படுத்தும்.

**கேள்வி: யுத்தச் சூழலில் மிகுந்த வசதிக் குறைபாடுகளின் மத்தியில்பணியாற்றியதற்கும் இப்போதுள்ள இயல்புச் சூழலில் பணியாற்றுவதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எப்படி உணருகிறீர்கள்?**

பதில்: யுத்தச்சூழ்நிலையில் அங்கே கிடைத்த வசதிகளை வைத்து கடமைகளை மேற்கொண்டு இருந்தோம். அங்கு இருப்பவர்கள் அதை ஏற்றுக் கொண்டு சென்றார்கள். அவர்களுக்கு நிலைமை என்னவென்று தெரியும். தற்போது பல்வேறு அரசியற் சூழல்கள், போட்டிகள், பொறாமைகள் போன்ற காரணங்களால் ஒருவர் மற்றவர் மீது கொள்ளும் வெறுப்பு, எதிர்ப்பு மற்றும் தவறான புரிதல் போன்றவை பரவலாக இடம்பெறுகின்றன. குறிப்பாக தேர்தல் ஒன்று நடைபெறும் காலங்களில் மக்களைக் குழுக்களாக பிரித்து இவற்றில் ஈடுபடுத்துகின்றார்கள்.

ஒவ்வொருவரும் தேர்தல் காலங்களில் ஏதாவது ஒரு விடயத்தை கையில் எடுத்து அவற்றுக்கு எதிராகப் போராடுவதற்கு எல்லோரையும் தூண்டுகின்றார்கள். அதனால் நடுநிலைமையோடு இருக்கும் சுகாதார சேவை நிறுவனங்கள் இந்த சிக்கலில் சிக்கி சேவையை வழங்குவதில் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

**கேள்வி: அன்று சந்திக்காத விமர்சனங்களை இப்போது சந்திப்பதற்குக் காரணம் என்ன?**

பதில்: சில பொறுப்பு வாய்ந்த நபர்கள், தங்களது நடுநிலைமையைக் கைவிட்டு தங்களுடைய செய்திக்காக, அர்ப்பணிப்போடு கடமையாற்றுகின்றவர்களை தூசித்தது துரதிர்ஷ்டமாக நிகழ்ந்துள்ளது. உதாரணமாக வடக்கில் கடமையாற்றும் மிக முக்கியமான சுகாதார அதிகாரிகளை ஊழல்வாதிகளாகவும் போதைவஸ்து கடத்துபவர்களாகவும் மிகப் பிரதானமான ஊடகங்களில் செய்திகள் பரப்பப்பட்டுள்ளன. அதேவேளையில் சிலரை மீட்பர்களாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்பத்தில் ஏற்படுத்திய விமர்சனம் பொதுமக்களிடத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பொதுமக்கள் சுகாதார சேவையின் உயர்நிலை உத்தியோகத்தர்கள் மீதும் சுகாதார சேவைகள் மீதும் நம்பிக்கையை வலுவிழக்க செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய தவறான விடயமாகும். குறிப்பாக பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றபோது, ஊடக அடிப்படையில் அவற்றை சம்பந்தப்பட்ட தரப்போடு கதைத்து, உண்மையைக் கண்டறிந்து நடுநிலையான - நேர்மையான செய்தியை வெளியிட்டு இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

**கேள்வி: நோயாளர்கள், முன்பு மருத்துவமனைக்கு வெளியே உள்ள Clinic Centers இல் அல்லது தனியார் சிகிச்சை நிலையங்களில் மருத்துவர்களைத் தொடர்பு கொண்டால், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கே அனுப்பப்பட்டு, சிகிச்சை பெறுவதற்கான வழி கிடைப்பதுண்டு. இதற்கு மாறாக இப்போது மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனைக்கு நோயாளர்கள் அனுப்பப்படும் சூழல் நிலவுவதாக மக்களிடத்திலே ஒரு குற்றச்சாட்டுண்டு. இது தொடர்பாக?**

பதில்: வைத்தியசாலையில் அநேகமான சேவைகள் இலவசமாகக் கிடைக்கின்றன. இருப்பினும் மாலை 4 மணிக்கு பின்னர் அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தனியார் வைத்தியசாலைகளில் கடமையாற்ற முடியும் என்ற சட்டம் இருப்பதனால் பலர் தனியார் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றுகின்றார்கள். இதனை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஒரு சிலர் பொது வைத்தியசாலைக்கு வருகின்றவர்களை மறைமுகமாக தனியார் வைத்தியசாலைக்கு செல்லத் தூண்டக் கூடும். ஆனால் பெரும்பாலானவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதில்லை. இவ்வாறு யாராவது ஒருவர் தூண்டப்பட்டால்,அந்த விபரங்களை எமக்கு சமர்ப்பிக்கின்றபோது நாங்கள் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம்.

**கேள்வி: போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கம் போன்றவை மருத்துவமனையின் தரம் மற்றும் மருத்துவ சேவைகள் தொடர்பாகக் கொண்டுள்ள அக்கறைகள், ஆதரவு நடவடிக்கைகள் எப்படியுள்ளன?**

பதில்: மேற்படி குழுக்கள் முறையாக நிர்வகிக்கப்பட்டு - சேவையாற்றி - வருகின்றன. குறிப்பாக அவர்களுக்கு கிடைக்கும் நிதியை நோயாளர்களுக்காக மருந்துகளை வாங்கி வழங்குதல், உபகரணங்களை வாங்கி வழங்குதல் மற்றும் சில சேவைக்காக ஆளணிகளை நியமித்தல் போன்ற கருமங்களைச் செய்து வருகின்றன. இது மிகவும் முக்கியமான ஒரு விடயம். அரச சேவையில் ஏற்படுகின்ற குறைபாடுகளை, வளப்பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதற்கு இது பெரும் உதவியாக இருக்கின்றது.

இதற்காக அவ்வப்போது பொது நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் நன்கொடைகளை வழங்கி வருகின்றார்கள். இவை அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு கணக்குகள் உரிய முறையில் காண்பிக்கப்படுகின்றன. வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுகின்றது. மிகவும் வெளிப்படைத் தன்மையோடு இயங்குகின்ற இந்த நிறுவனத்தின் ஆண்டு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வுப் பிரதிகளை ஆராய்ந்து பார்த்தால் இதனுடைய வெளிப்படைத் தன்மையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். இந்த நிறுவனங்களின் உதவியை, நன்மைகளை பெறுகின்ற ஆயிரக்கணக்கானவர்கள் இதை ஏனைய பொதுமக்களுக்கு எடுத்து கூறுவது நல்லது. அது ஊக்கமாக அமையும்.



**கேள்வி: மருத்துவமனையில் சில துறைகளில் மிகச் சிறப்பான சேவை கிடைப்பதாக மக்கள் பாராட்டுகிறார்கள். அதேவேளை சில துறைகளில் பொறுப்பின்மையும் புதிரான போக்கும் (தெளிவற்ற அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குழப்பங்கள்) உள்ளன என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவை பற்றிய முறைப்பாடுகள் - அறிதல்கள் உண்டா?**

பதில்: யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறுபட்ட சேவைகள் வழங்கப்படுவதனால் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். நோயாளி ஒருவர் வைத்தியசாலைக்கு வருகின்றபோது, அவருடைய நோய் நிலைக்காக பல்வேறு சேவை மையங்களை சென்றடைகின்றார். சில சேவை மையங்களில் நீங்கள் குறிப்பிட்டவாறு தெளிவற்ற வழிகாட்டுதல் காணப்படுவதனால் குழப்பங்கள் நேர்கின்றன. அவற்றை சீர் செய்ய வேண்டி இருக்கின்றது. எதிர்காலத்தில் அவற்றையும் சீர் செய்து சிறப்பான சேவைகளை செய்ய முயற்சிப்போம்.

**கேள்வி: போதனா மருத்துவமனையின் பௌதீக வளங்கள் எப்படியுள்ளன?**

பதில்: போதனா வைத்தியசாலை தற்போது 1350 படுக்கைகளைக் கொண்டிருக்கின்றது. மற்றும் தினசரி 2500 க்கு மேற்பட்டவர்கள் பல்வேறு கிளினிக் சேவைகளுக்காக வருகின்றார்கள். எமக்கு மேலும் விடுதிகள் திறக்கப்பட வேண்டும். ஏனெனில் கட்டில் வசதியின்மை காரணமாக சில சமயங்களில் சிலர் நிலத்தில் படுத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் மேலும் 200 படுக்கைகளுக்கான மூன்று விடுதித் தொகுதிகள் திறக்கப்பட இருக்கின்றன. இவற்றின் மூலம் ஓரளவு இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும். இருப்பினும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற கிளினிக் கட்டிடத் தொகுதி பொருத்தமான இடத்தில் அமைந்திருக்கவில்லை. அவற்றுக்குப் பொருத்தமான கட்டடத் தொகுதியை அமைத்துக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம். அவற்றைச் செய்வதற்கு ஒரு சில வருடங்கள் ஆகலாம்.

**கேள்வி: மேலும் என்ன மாதிரியான தேவைகள் உள்ளன?**

பதில்: நாளுக்கு நாள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அதற்கு ஏற்றவாறு கட்டிட வசதி, ஆளணி வசதி, உபகரண வசதி, மருந்து வசதி போன்றன பூரணமாகக் காணப்படவில்லை. ஆகவே, எல்லாவற்றையும் மேம்படுத்த முயற்சிகளை எடுக்கின்றோம். இவ்வாறு போதனா வைத்தியசாலையில் வசதிகளை அதிகரிக்கின்றபோது அடுத்த அடுக்கிலுள்ள பல சிறிய வைத்தியசாலைகள் தங்களுடைய சேவைகளைச் சுருக்கிக்கொள்கின்றன.

அவர்கள் நேரடியாக “யாழ் போதனா வைத்தியசாலைக்கு செல்லுங்கள்” என பொதுமக்களை அனுப்பி வைப்பதனால் நாம் நெரிசல்களை எதிர்நோக்குகின்றோம். குறிப்பாக ஒரு வசதியைச் சிறப்பாக செய்கின்றபோது பொதுமக்கள் தமக்கருகில் உள்ள (சிறிய) வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு செல்லாமல் இங்கே வந்து சேவை பெற வேண்டும் என முயற்சிக்கின்றார்கள். இதனை எம்மால் தடுத்து விட முடியாது. ஆகவே பிராந்தியங்களில் காணப்படுகின்ற ஏனைய வைத்தியசாலைகளும் தரமான சேவை வழங்கி அவர்கள் பகுதிகளில் இருக்கின்றவர்களின் உளநிலையில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அங்கு செய்யப்பட வேண்டிய சேவைக்காக - பெற்றுக் கொள்ள வேண்டிய சிகிச்சைக்காக இங்கு வருவதை தவிர்க்க முயல வேண்டும்.

**கேள்வி: மருத்துவ சேவைத் தரத்தை எப்படி மேம்படுத்தலாம் என்று கருதுகிறீர்கள்?**

பதில்: தினசரி சேவையை மேம்படுத்துவதற்காக அன்றாடம் பல கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது. தினசரி வைத்தியசாலையின் அன்றாடப் பராமரிப்பு நமக்கு பெரும் சவாலாக இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் சேவைக்காக வந்து செல்வதினால் கட்டடப் பகுதி, மலசல கூட வசதி, தளபாட வசதி என பல்வேறு வசதிகளை நாங்கள் தொடர்ச்சியாக சீர் செய்த வண்ணமே இருக்க வேண்டும். குறிப்பாக கழிவகற்றுவதைக் கிரமமாகச் செய்ய வேண்டியிருக்கின்றது. இங்கிருந்து வெளியேறும் கழிவுநீரை சரியான முறையில் சுத்திகரித்த பின்னரே வெளியில் விட வேண்டும். இதற்கும் நாங்கள் கிரமமான நடவடிக்கைகளை எடுத்து அவற்றைச் செய்ய வேண்டி இருக்கின்றது. எமது சூழலில் இவற்றைச் செய்வது மிக இலகுவான காரியம் இல்லை. ஆகவே எதிர்காலத்தில் மேலும் ஆளணிகள் அதிகரிக்கப்பட்டு இவற்றைச் சிறப்பாகச் செய்வதற்கு முயற்சிப்போம்.

**கேள்வி: புலம்பெயர்ந்தோரிடமிருந்து இதற்கான ஆதரவைப் பெறுவதற்கான திட்டங்கள்?**

பதில்: புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அமைப்புகள், அங்குள்ள தனிப்பட்ட நபர்கள் கடந்த காலங்களில் போதனா வைத்தியசாலைக்குப் பல உதவிகளைச் செய்து வந்தமையைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக ஆஸ்திரேலிய மருத்துவ நிதியம் (AMAF) மற்றும் அமெரிக்காவில் தலைமை இடத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (IMHO)போன்றவற்றின் தொடர்ச்சியான சேவைகள் எப்போதும் எமக்கு பெரும் உதவியாக இருக்கின்றன.

கடந்த காலங்களில் தனிப்பட்ட கொடையாளர்களின் உதவியும் எமது சேவைக்கு பெரும் உதவியாக இருந்தது. அந்த வகையில் திரு .நாதன், திரு. ரஞ்சன், திரு . நந்தபாலன் போன்றவர்களோடு மேலும் சிலர் இணைந்து எமது வைத்தியசாலைக்காக வழங்கப்பட்ட CT உபகரணம் மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயம். கடந்த ஐந்து வருடங்களாக மேற்படி இயந்திரம் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு CT படத்தினை எடுக்க முடிந்துள்ளது. இது தவிர திரு. ராஜராஜனும் லேப்ராஸ்கோபி இயந்திரத்தை வாங்கி அன்பளிப்பு செய்திருந்தார். திரு. நாதன் அவர்கள் தொடர்ச்சியாக பல மில்லியன் ரூபா பெறுமதியான பல இயந்திரங்களை வாங்கி தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: மக்கள் மற்றும் சமூக ஆதரவு எப்படி அமைய வேண்டும்?**

பதில்: இந்த வைத்தியசாலை குறிப்பாக வடபகுதி மக்களுக்கு சொந்தமான ஒரு நிறுவனம். பொது அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இந்த அமைப்பின் சேவைத் தன்மையை விளங்கி அதனை பாதுகாக்க முன்வர வேண்டும். இதன் சிக்கலான சேவை பற்றி உண்மையறிந்து, நிலைமையறிந்து, புரிந்துணர்வுடன் குரல் கொடுக்க வேண்டும்.இதில் பயன்பெற்றவர்கள் பயமின்றி தங்கள் கருத்துகளை பதிவு செய்ய வேண்டும்.

**கேள்வி: மருத்துவமனைகள் மற்றும் வைத்திய சேவைகள் தொடர்பாக ஊடகங்களின் (Medias) பொறுப்புத் தொடர்பாக?**

பதில்: வைத்திய சேவையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இவை பற்றி ஒருசிலர் தெரிவித்த கருத்துகள் ஆரம்பத்தில் செய்திகளாக வெளிவந்தன. பின்னர் பொருத்தமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவையும் செய்தி ஊடகங்களினால் பரப்பப்பட்டு வெளியிடப்பட்டன. அப்போது நாம் கருத்துக் கூற முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. திடீரென ஊடகங்கள் பல உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட தொடங்கின. மக்கள் நிதானித்து அறிய முடியாத சூழல் உருவாக்கப்பட்டது. இதனால் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இறுதியில் ஒரு சில தவறுகள் இருந்தாலும் ஒட்டுமொத்த சுகாதார சேவை மீதும் பெரும் குற்றம் சாட்டப்பட்டு உலகெங்கும் இருக்கின்றவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது இலங்கையில் இருப்பவர்களிடத்திலும் புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களிடமும் அவநம்பிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது மாத்திரம் அல்ல, சேவையிலே இருக்கின்றவர்களிடம் சோர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அவர்கள் ஒரு பதற்ற நிலையில், கவலையடைந்த நிலையில் வேதனையோடிருந்து சேவைகளைச் செய்து வருகின்றார்கள். எதிர்வரும் காலங்களில் சுகாதார சேவைக்காக கடமைக்கு வரும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவடையலாம். அத்துடன் இங்கிருந்து வெளியேறிப் புலம்பெயர் நாடுகளுக்கு சென்று கடமையாற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும். இது இலங்கை போன்ற நாடுகளில் இலவச சேவை வழங்குதலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகவே ஊடகங்களுக்கு மிக முக்கியமான கடமையும் பொறுப்பும் இருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் அவர்கள் சிறப்பாக செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.







# பழையன கழிதலும், புதியன புகுதலும், தகுதியன நிலைத்தலும்

1984 ஆம் ஆண்டு வெளியான ஒஸ்கர் விருது பெற்ற அமேடியஸ் (Amadeus) திரைப்படத்தில் இசைமேதை மொஸாரர்ட் (Mozart) ஒஸ்திரியப் பேரரசரிடம் அறிமுகப்படுத்தப்படும் காட்சியில், பேரரசர் தனது இசைக் குருவான சலீரி (Antonio Salieri) இசையமைத்த ஒரு பாகத்தை பியானோவில் வாசித்துக் கொண்டிருப்பார். அப்பொழுது அவையில் உள்ளே நுழையும் மொஸாரர்ட் அந்த இசைக்கோர்வையை எந்த இசைக்குறிப்புமின்றி வாசித்துக்காட்டுவதோடு அந்தப் பகுதியை மறுசீரமைத்து, "தி மேரேஜ் ஒஃப் ஃபிகாரோ" என்ற வேறு வகை இசைப்பாடலாக மாற்றி எல்லோரையையும் அசரச் செய்துவிடுவார். அப்பொழுது சலீரி முகத்தில் பொறாமை கொப்பளிப்பதை மிக அற்புதமாக காட்டியிருப்பார்கள். சலீரி எவ்வளவு முயன்றும் அவரால் மொஸார்ட் இடத்தையோ அல்லது இசையில் உச்சத்திற்கோ மிக அருகில் வரமுடியாது என்பதை படம் நமக்குத் தெரியப்படுத்தும். மொஸார்ட் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர். எந்தவிதமான சிரமமுமின்றி அவருக்கு இசை வருகிறது. சலீரி எவ்வளவு முயன்றும் அவரால் மொசார்ட் போன்று உன்னத இசையைப் படைக்கமுடியவில்லை. இதை போன்று தான் கால்பந்து ஜாம்பவான்களான மெஸ்ஸி மற்றும் ரொனால்டோ இடையேயுள்ள போட்டியும். மெஸ்ஸி கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர். அவர் விளையாடும்பொழுது பந்து கால்களில் தவழ்கிறது .அவருடன் கொஞ்சிக் குலாவுகிறது. ரொனால்டோ கடும் உழைப்புக் கொடுத்து வெற்றிகளை குவிக்கிறார். ஆனால் மெஸ்ஸியை நெருங்க முடியவில்லை.

மெஸ்ஸி தான் எல்லாக்காலத்திலும் தலைசிறந்த கால்பந்து வீரன் என்று 2022 உலகக் கோப்பை வென்றவுடன் நிரூபணமாகிவிட்டது என்றபோதிலும் அவரது ரசிகர்கள் மோதிக்கொள்வதற்கு இன்னொரு வாய்ப்பு கடந்த ஜூன்-ஜூலை மாதம் நடந்த அமெரிக்கக் கோப்பை மற்றும் ஐரோப்பாக் கோப்பை விளையாட்டுப் போட்டியில் கிடைத்தது .கால்பந்து திருவிழா கடந்த ஒரு மாதமாக அமெரிக்கா மற்றும் ஜெர்மனியில் கடந்த ஜூன் மாதம் தொடங்கி ஜூலை மாதம் முடிவு பெற்றது. இந்த போட்டிகள் ஆரம்பிக்கும் முன்னரே ஊடகங்களும், ரசிகர்களும் மெஸ்ஸி-ரொனால்டோ சண்டையில் மும்முரமாக ஈடுபட்டனர். மெஸ்ஸியும், ரொனால்டோவும் ஐரோப்பிய கால்பந்தாட்டக் குழுக்களில் விளையாடவில்லை என்பது நாம் அறிந்ததே இருவரும் தத்தமது அணிகளுக்காக அதாவது மெஸ்ஸி அமெரிக்க அணியான மியாமி ( Inter Miami ) மற்றும் ரொனால்டோ சவுதி அரேபிய அணியான அல்-நாசர் ( Al -Nassr ) அணிக்காக சிறப்புடன் விளையாடி வருகின்றனர். ஆதலால் இரு தரப்பு ரசிகர்களுக்கும் தங்களது நாயகன் கோப்பையை வெல்லவேண்டுமென்பதே விருப்பமாக இருந்தது.

நடந்து முடிந்த யூரோ 2024 விளையாட்டுப் போட்டியில் 39 வயதான ரொனால்டோவின் பங்களிப்பு என்ன என்பதை விரல்விட்டு எண்ணிவிடலாம். மொத்தமே ஒரே ஒரு கோல் அடிப்பதற்கு உதவி மட்டுமே . கடந்த வருடங்களில் நடந்த 'நொக் அவுட்' எனப்படும் தோற்றால் வெளியேறும் 11 விளையாட்டு போட்டிகளில் அவர் அடித்த கோல், ஒன்று மட்டுமே. அவருக்கு வயதாகி விட்டதை அவர் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டு இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஸ்லோவேனியாவிற்கு எதிரான காலிறுதிற்கு முந்திய ஆட்டத்தில் மிக எளிதாக கோல் அடிக்கக் கூடிய பெனால்டி வாய்ப்பை நழுவவிட்டு போர்த்துக்கல் அணியினை 'பெனால்டி shootout' எனப்படும் இறுதி நிலைக்கு கொண்டு சென்றார். நல்லவேளை அவரது அணியின் கோல் கீப்பர் டியோகோ கோஸ்டா எதிரணியரின் கோல்களை தடுக்காமலிருந்தால் எப்போதோ போர்த்துக்கல் அணி வெளியேறியிருக்கும். ரொனால்டோ அனைத்துப் போட்டிகளிலும் இளம் தலைமுறையினருக்கு எதிராக விளையாடி அந்த அணியின் தோல்விக்கு மொத்தக் காரணமாயிருந்தார். liverpool, psg போன்ற தலைசிறந்த அணியில் விளையாடும் முன்னணி நட்சத்திரங்களான Gonçalo Ramos, Diogo Jota போன்ற இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் விளையாட்டின் கடைசி நேரம் விளையாடி அணியின் தோல்விக்கு முழுக் காரணமாயிருந்தவர்கள் ரொனால்டோ மற்றும் அணியின் பயிற்சியாளர் Roberto Martínez . ஒரு அணியின் தலைவன் போன்று ரொனால்டோ விளையாடவில்லை. கடைசி நிமிடம் வரை தனது சொந்த சாதனைகளுக்காகவே விளையாடினார். கடைசிப் போட்டியில் பிரான்ஸ் அணியிடம் பெனால்டி shootout-ல் தோற்றபொழுது மொத்த அணியினரும் பெனால்டியை தவறவிட்ட João Félix க்கு ஆறுதல் செய்யும்பொழுது ,ரொனால்டோ மட்டும் தனியே நடந்து சென்றதை இந்த உலகம் என்றும் மன்னிக்காது.

இதே போன்று இங்கிலாந்து-ஸ்பெயின் இறுதி ஆட்டத்தில் முழு உடல்தகுதியற்ற நிலையில் இங்கிலாந்து அணித் தலைவர் Harry kane விளையாடியதும் அந்த அணியின் தோல்விக்கு காரணமாக இருந்தது. அணியின் பயிற்சியாளர் Gareth Southgate இளம்தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்காமல், அதிரடி முடிவெடுக்க பயந்து Harry kane ஐ தொடக்க ஆட்டக்காரராக பயன்படுத்தியதும் தோல்விக்கான காரணங்கள். பரபரப்பான இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி ஸ்பெயின் 'யூரோ 2024 'சம்பியன் ஆனது. ஸ்பெயினின் வெற்றிக்கு மையமான ரோட்ரி, போட்டியின் நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்பெயினின் இளம் நட்சத்திரங்களான லாமின் யமல் மற்றும் நிகோ வில்லியம்ஸ், ஜெர்மனியில் நடந்த இந்த யூரோ கோப்பையில் நம்பிக்கை நட்சத்திரங்களாக மிளிர்ந்தனர் . ஒவ்வொரு போட்டியிலும் அபாரமாக விளையாடி ஸ்பெயினின் வெற்றிக்கு உதவி செய்தனர். இறுதிப்போட்டியில் விளையாடி சிறந்த இளம் வீரருக்கான விருது பெற்ற லாமின் யமல் ( வயது 17) மற்றும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக தேர்வாகிய நிகோ வில்லியம்ஸ் (வயது 21) போன்ற இளைஞர்களின் கைகளில் தான் ஸ்பெயினின் வருங்காலம் தங்கியுள்ளது.

மறுபுறம் அமெரிக்கக் கோப்பையில் உலகின் தலைசிறந்த விளையாட்டு வீரனான மெஸ்ஸியின் தலைமையில் இறுதிப் போட்டியில் கொலம்பியாவை வீழ்த்தி சாம்பியனானது அர்ஜெண்டினா. அவர் போட்டிகளில் விளையாடும்போது அர்ஜெண்டினா அணிக்கு உத்வேகம் வருகிறது என்பதை மறக்க முடியாது. 2022 உலகக்கோப்பையில் வென்றிருந்த அணியை எந்த மாற்றமும் செய்யாமல் அமெரிக்க கோப்பை இறுதிக்கு பயன்படுத்தியிருந்தார் அணியின் பயிற்சியாளர் Lionel Scaloni. தனிப்பட்ட முறையில் இந்தப் போட்டிகளில் மெஸ்ஸியின் பங்களிப்பு (மெஸ்ஸி அனைத்து போட்டிகளிலும் விளையாடி ஒரு கோல் மற்றும் ஒரு கோல் அடிப்பதற்கு உதவி ) மிகக் குறைவெனினும், ஒரு அணியின் தலைவனாக வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார் . இறுதிப்போட்டியின் போது காயம் காரணமாக வெளியேறிய மெஸ்ஸி ,அணியின் வெற்றிக்கு பாடுபட முடியாத கையறு நிலையை எண்ணி அழுததை அரங்கில் இருந்த அத்துணை ரசிகர்களும் கண்டு கண்ணீர் விட்டு கலங்கியது மறக்க முடியாத நிகழ்வு. அமெரிக்கக் கோப்பை விளையாட்டு போட்டியில் அனைவரையும் கவர்ந்த அணி கொலம்பியா. போட்டி நடைபெறுவதற்கு முன்னர் யாரும் எதிர்பார்த்திராத கொலம்பியா அணி , எல்லா போட்டிகளிலும் மிக சிறப்பாக விளையாடி குறிப்பாக உருகுவே அணியை அரையிறுதியில் வீழ்த்தி இறுதிப் போட்டியில் மெஸ்ஸியின் தலைமையிலான அர்ஜெண்டினா அணிக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது . இறுதிப்போட்டி ஒரு கால்பந்து விளையாட்டு போன்றல்லாமல் ஒரு யுத்தம் போன்று இருந்தது. கொலம்பியா அணி மிகச் சிறப்பாக தடுப்பாட்டத்தைக் கையாண்டது. ஆனால் இறுதிப்போட்டியானது கூடுதல் நேரத்திற்கு சென்றபொழுது கொலம்பியா அணியில் மாற்று வீரர்கள் இன்றி தீரத்துடன் விளையாடியதை மறக்க முடியாது. மறுமுனையில் அர்ஜெண்டினா அணியின் மாற்று வீரராக 96 வது நிமிடத்தில் களமிறங்கிய Lautaro Martínez 112வது நிமிடத்தில் கோல் அடித்து மெஸ்ஸி மற்றொரு கோப்பையை வெல்வதற்கு துணை புரிந்தார்.

அமெரிக்கக் கோப்பை போட்டிகளில் ரசிகர்களின் இதயம் கவர்ந்தவர் கொலம்பியா அணியின் தலைவரான James Rodríguez . ஆறு போட்டிகளில் விளையாடி ஒரு கோல் அடித்ததோடு 6 கோல்கள் அடிப்பதற்கு உதவி புரிந்து அணியின் தலைவராக கொலம்பியாவை இறுதிப்போட்டிக்கு முன்னேறச் செய்து, சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருது பெற்றார் . தகுதியானவர்கள் என்றும் விளையாட்டில் நிலைத்து நிற்பர் என்பதற்கு இவர் ஒரு சிறந்த உதாரணம்.

மெஸ்ஸி எதிர்வரும் 2026 உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடுவாரா என்று தெரியவில்லை. ஆனால் போர்த்துக்கலின் ரொனால்டோ கண்டிப்பாக விளையாடுவேன் என்று பேட்டிகளில் சொல்லி வருகிறார் . அதாவது தனது 41 ஆவது வயதில் தனது நாட்டிற்காக விளையாடி கோப்பையை வெல்வேனென்று கூறுகிறார். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவாராம் என்ற கதையாக இருக்கிறது அவரது பேட்டி. நடந்து முடிந்த யூரோ விளையாட்டு போட்டிகளில் அவரது ஆட்டத்தைப் பார்த்த அனைத்து கால்பந்து வல்லுநர்களும் , 'இப்பொழுது அவர் ஓய்வு பெறுவது தான் நல்ல முடிவு. எந்த விளையாட்டு வீரனும் சரியான நேரத்தில் ஓய்வு பெற்றுவிட வேண்டும். அதுதான் அவர்களின் பெருமைக்கு புகழ் சேர்க்கும். 'என்று சொல்கின்றனர். புகழ்பெற்ற கால்பந்து விளையாட்டு வீரரும், வர்ணனையாளருமான Jamie carragher, "ரொனால்டோ சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இதைவிட சரியான தருணம் இல்லை. கால்பந்து உங்களை ஒதுக்கி தள்ளுவதற்கு முன்பு நீங்கள் ஓய்வு பெறுவதே சிறந்த முடிவு" என்று சொல்லியிருக்கிறார். காதல் மன்னன் திரைப்படத்தில் அஜித், மானு காதலுக்கு குறுக்கே விவேக் இருப்பார் . படத்தின் இறுதியில் எம்.எஸ்.விஸ்வநாதன் அதனை உணர்ந்து கொண்டு விவேக்கிடம் "குறுக்கே நிற்காதே, கொஞ்சம் வழியை விடுறயா" என்று நக்கலாக சொல்லிக்கொண்டு போவார். அதே போன்று கால்பந்து ரசிகர்களும் ,போர்த்துக்கல் மக்களும் ரொனால்டோவைப் பார்த்து இப்போது என்ன சொல்கிறார்கள் தெரியுமா "உனக்கு வயசாகிடுச்சுப்பா , கொஞ்சம் வழியை விடுறயா" என்பது தான். ■



# புதிய மொந்தையில் பழைய ‘கள்’

## இந்திய நிதிநிலை அறிக்கை 2024-25

உலகின் எல்லா நாடுகளிலுமே மக்கள் நலத் திட்டங்களுக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும், அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்க மேம்படுத்த பல விதமான வரிகள் விதிக்கப்படுவது வழக்கமே. இந்த வரிகளின் வழியே நாட்டையும் நாட்டு மக்களையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது தான் அரசுகளின் லட்சியம்.

இந்தியாவில் ஒரு ‘மைனாரிட்டி’ அரசாக பா.ஜ.க. பதவியேற்ற பிறகு அவர்கள் தங்களது முதல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தனர், அந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள், வரிச் சலுகைகள் உள்ளிட்ட முக்கியமான அம்சங்கள் அறிவிக்கப்பட்டன.

2014க்கு முன்பு காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்து இந்தியாவை இருளில் மூழ்கடித்தது. அதில் இருந்து இந்தியாவை நாங்கள் வல்லரசாக மாற்றுவோம் என்கிற முழக்கத்துடன் ஆட்சியை பிடித்த பா.ஜ.க.வினர் இந்த ஆண்டு பட்ஜெட் வரை காங்கிரஸை குறைகள் கூறியபடியே உள்ளனர். ஆனால் ‘அது எல்லாம் சரி, கடந்த 2014 முதல் 2024 வரை பத்து ஆண்டுகள் நீங்கள் தானே ஆட்சியில் இருக்கிறீர்கள், இன்னும் காங்கிரஸை குறைகூறாமல் உங்கள் பத்து ஆண்டுகள் சாதனையைத் தான் கொஞ்சம் சொல்லுங்களே ’என்று நீங்கள் கேள்வி கேட்டீர்கள் என்றால் அவர்களிடம் பெரும் மௌனத்தை தவிர வேறு பதில்கள் இல்லை.

இந்த ஆண்டும் அவர்களின் 2024-25 நிதிநிலை அறிக்கை என்பது கூடுதலாக ஒரு அம்சத்துடன் மிளிர்ந்தது. ஆட்சியைக் காப்பாற்றும் அந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு புதிய அம்சம் இணைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மை பெறமுடியாத பா.ஜ.க. கட்சி இந்த முறை நிதி அமைச்சரிடம் பட்ஜெட்டின் வழியே அரசைக் காத்தல் என்கிற பொறுப்பை வழங்கியபடியால், அவர் நிதி நிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் வாசிக்க தொடங்கியது முதல் பீகார், ஆந்திரா, பீகார், ஆந்திரா என்று ஒரு மந்திரம் போல் ஓதினார். பீகார் மாநிலத்துக்கு சாலைத் திட்டங்களுக்காக ரூ.26,000 கோடி, மின்சாரத் திட்டங்களுக்காக 21,400 கோடி, வெள்ளம் தடுப்புக்காக 11,500 கோடி என அறிவிப்பு மழையாக இருந்தது.

ஆந்திராவுக்கு ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கீடு என தொடங்கி, ஆந்திர தலைநகர் வளர்ச்சிக்கு சிறப்பு நிதியுதவிகள்,போலவரம் பாசனத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற நிதி, விசாகப்பட்டினம்- சென்னை இடையே தொழில்துறை மேம்பாட்டு வழித்தடம், சென்னை-ஹைதராபாத் இடையே தொழில்துறை மேம்பாட்டு வழித்தடம் ஆகிய திட்டங்களுக்கு கூடுதல் நிதியுதவிகள் அறிவிக்கப்பட்டன. மேலும் ஆந்திராவின் ராயலசீமா, பிரகாசம், வடக்கு கடற்கரையோர பின்தங்கிய பகுதிகளுக்கு மானியம் என பல்வேறு சிறப்புத் திட்ட நிதிகளும் அறிவிக்கப்பட்டன. ஆனால் அதே நேரத்தில் பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இல்லாத மாநிலங்களின் பெயர்களை மறந்தும் கூட நிதி அமைச்சர் உச்சரிக்கவில்லை என்பது கூட்டாட்சியின் பெரும் சாபக்கேடாக அமைந்தது.

இவை எல்லாம் போதாது என்று பீகார் மற்றும் ஆந்திர முதல்வர்கள் தங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்த வண்ணம் உள்ளனர். எதிர்க்கட்சிகளோ ’இந்த நிதிநிலை அறிக்கை என்பது இந்த இரண்டு மாநிலங்களுக்கானது, எப்பொழுது மீதி இந்தியாவில் உள்ள 26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதிநிலை அறிக்கையை வெளியிடுவீர்கள்?’ என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

2014 இல் ஆட்சிக்கு வந்தது முதல் இவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றைக்கூட அவர்கள் இதுவரை நிறைவேற்றாத நிலையில், இவர்களின் இன்றைய அறிவிப்புகள் ஏதும் மக்களுக்கு எவ்வகையிலும் நம்பிக்கையளிக்கவில்லை. இந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வினர் தங்களின் பத்து ஆண்டுகள் ஆட்சியின் சாதனைகளில் ஒன்றைக் கூட சொல்லி வாக்குக் கேட்கவில்லை என்பதிலேயே இவர்கள் பத்து ஆண்டுகள் எதையும் செய்யவில்லை என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தியது.

வருடம் தோறும் இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்றார்கள், ஆனால் இவர்களின் முறைகேடான ஜி.எஸ்.டி மற்றும் பணமதிப்பு இழப்பால் வேலை இழந்தோரின் எண்ணிக்கை பல கோடியாக திகழ்கிறது. அது வருடம் தோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

அரசு துறைகளில் கூட கடந்த பத்து ஆண்டுகளில் வேலையிடங்கள் நிரப்பப்படவில்லை, உதாரணத்திற்கு ரயில்வே துறையில் தினசரி விபத்துகள் நடப்பது வாடிக்கையாக உள்ளது, மரண ஓலங்கள் எங்கும் கேட்டபடி உள்ளன. ஆனால் அதே ரயில்வே துறையில் காலி பணியிடங்களின் எண்ணிக்கை இரண்டு லட்சமாகத் திகழ்கிறது. தினசரி பல கோடி பேர் பயணிக்கும் ரயில்வே துறையில் மக்களின் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்த இந்த பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு தரப்பில் எவ்வித முயற்சியும் இதுவரை இல்லை.



அ.முத்துக்கிருஷ்ணன்

இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு உலகிலேயே அதிகபட்ச விலையில் பெற்றோல், டீசல் விலை இந்தியாவில்தான் உள்ளது, ஒவ்வொரு சாமானியரும் தினசரி கடும் வரிகளைச் செலுத்தியே எரிபொருள் நிரப்புகிறார்கள், எரிபொருளின் விலையால் சந்தையில் விற்கும் ஒவ்வொரு பொருளும் பல்மடங்கு விலையேற்றம் கண்டிருக்கிறது. ஆனால் மாறாக நிதி அமைச்சர் பிளாட்டினம் மீதான சுங்க வரி 6.4 சதவீதமாக குறைப்பு என்று அறிவிக்கும்போது சாமானிய மக்களின் மனநிலை என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

நிதிநிலை அறிக்கைக்கு இந்திய வரலாற்றில் ஒரு மாண்பு இருந்தது, அந்த அறிக்கையை மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடன் நோக்குவார்கள். அடுத்த ஓராண்டிற்கு இந்த நாடு எத்திசையில் செல்லும் என்கிற திசைவழியை கொடுக்கும். ஆனால் 2014 முதல் நிதிநிலை அறிக்கையை பா.ஜ.க.வினர் அரசியல் மேடைப்பேச்சு போல் மாற்றிவிட்டார்கள், அவர்கள் பேசும் எதற்கும் அவர்கள் பொறுப்பேற்க வேண்டியதில்லை எல்லாம் காற்றில் பறக்கவிடும் பட்டம் போல் வெற்றுக் காகிதமாக மாறிவிட்டது.

I.T., GST, CST, Service Tax, Excise Duty, Customs Duty, Octroi, TDS, ESI , Property Tax, Stamp, CGT Water Tax, Professional Tax, Corporate Tax, Road Tax, STT, Education Cess, Wealth Tax, TOT, Capital Gain Tax, TOLL GATE FEE மேலே உள்ள அனைத்துமே ஒவ்வொரு சராசரி இந்தியரும் கட்டும் வரிகளின் பெயர்கள். நாங்கள் பிரிட்டன் போல் வரிகளை கட்டிவிட்டு சோமாலியா போல் வாழ்வை அனுபவித்து வருகிறோம்.

இந்தியாவில் ஒரு பழமொழி உள்ளது. அதாவது ஒரு நல்ல வரிவிதிப்பு முறை என்பது தேனீ ஒரு பூவில் இருந்து தேனை எடுப்பது போல் இருத்தல் வேண்டும், அது பூவையும் சேதப்படுத்திவிடக்கூடாது அதே வேளையில் தன் பசியையும் ஆற்றிக்கொள்ள வேண்டும். ஆனால் இவர்களின் நிதிநிலை அறிக்கை வருடம் தோறும் கோடிக்கணக்கானவர்களை ஏழ்மை நோக்கி உந்தித்தள்ளிய வண்ணம் உள்ளது.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



# தன் தலையில் தானே மண்ணள்ளிப்போட்ட அர்ச்சுனா

● ஜெரா

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் சூடுபிடித்திருக்கிறது. ஆனால் அந்தச் சூட்டைக்கூட தவிடுபொடியாக்கிக் கொண்டிருக்கிறது மருத்துவர் அர்ச்சுனா விவகாரம். எவ்வளவு பெரிய பிரச்சினையாகினும், ஒரு வாரத்திற்குள் அடங்கிவிடும் தமிழ்ச் சூழலில், அர்ச்சுனா விவகாரம் மட்டும் மாதம் கடந்தும் அதன் சூடு தணியாது கொதிநிலையிலேயே இருக்கக் காரணமென்ன?

மக்கள் மத்தியில் அரச மருத்துவத்துறை மீதிருக்கும் வெறுப்புணர்வுதான். இலங்கை அரசு இலவசமாக வழங்கும் மருத்துவத்தினை, பொதுமக்கள் சரியாகப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவர்களின் அசண்டையீனம், பாராமுகம், ஏற்றத்தாழ்வு பார்த்தல், உரிய சேவையை வழங்க மறுத்தல், சேவையை உதாசீனம் செய்தல், பொறுப்புக்கூறலின்மை, கவனமின்மை, தம் பொறுப்பைக் கவனியாது விடல், கடமையைச் சரிவரச்செய்வதிலிருந்து விலகல் எனப் பல குறைபாடுகளைக் கொண்டே இலங்கையின் அரச மருத்துவத்துறை இயங்குகின்றது. இதனால் நோயாளர்களாகிய பொதுமக்கள் அன்றாடம் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர். அரச மருத்துவமனைகளில் மருத்துவர்களினதும், மருத்துவப் பணியாளர்களினதும் தவறுகளால் நாளாந்த இறப்புகள் பதிவாகிக்கொண்டே இருக்கின்றன. கடந்த வாரம் கூட மன்னார் மருத்துவமனையில் இளந்தாய் ஒருவர், மருத்துவர்களின் கவனிப்பின்மையால் இறந்தார். எனவே இதுபோன்ற பல அசம்பாவிதங்களை எதிர்கொண்டு, மக்கள் கொதித்துப்போய் இருந்தனர். இருக்கின்றனர். இதனையெல்லாம் தட்டிக்கேட்க யாராவது ஒருவர் வரமாட்டாரா என்கிற எதிர்பார்ப்பில் மக்கள் காத்துக்கிடந்தனர்.

அந்த ஏக்கத்தைத் தணிக்க வந்தவரே மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன். அதாவது 'அரச மருத்துவத்துறைக்குள்ளிருந்தே அரச மருத்துவத்துறையில் இடம்பெறும் ஊழல்களையும் மக்கள் விரோதப் போக்குகளையும் அம்பலப்படுத்த ஒருவர் முன்வந்திருக்கிறார். இவர்தான் நாம் இதுவரை காலமும் எதிர்பார்த்திருந்த வீரன்' என்கிற கணக்கில் மக்கள் அவரின் பின்னால் திரண்டனர். ஏனெனில் அரச மருத்துவத்துறையாளர்கள் நோய் தீர்க்கச் செல்லும் நோயாளர்கள் மீது காட்டும் விரோதப் போக்கின் தீவிரம் அவ்வளவு பெரியது. மக்கள் மனதளவில் புழுங்கிக்கொண்டிருந்த நிலையானது, அர்ச்சுனாவின் அலையைத் தீ அலையாக மாற்றியது. இதனடிப்படையில்தான் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக மக்கள் திரண்டனர். மருத்துவ மாபியாக்கள் ஒழிக்கப்படவேண்டும், அரச மருத்துவத் துறைகளில் சீர்திருத்தம் வேண்டும் எனக் குரல் எழுப்பினர். இதனை சரியாக - ஒரே கொள்கையின் கீழ் வழிநடத்தியிருந்தால், இந்தப் போராட்டம் இலங்கை தழுவியதாக மாறியிருக்கும். அரச மருத்துவத்துறையிலும், மருத்துவ மாபியாக்கள் மத்தியிலும் மாற்றங்கள் ஏற்பட வழியேற்பட்டிருக்கும். ஆனால் போராட்டத்தின் மூல காரணமாக இருந்த அர்ச்சுனாவே அந்தப் போராட்டத்தை திசைமாற்றிவிட்டார். அப்போராட்டத்திலிருந்து எழுச்சி கொண்ட மக்கள் ஒதுங்கிப்போக வழியேற்படுத்திக்கொடுத்தார்.

பிரச்சினையே அவர்கொடுத்த நேர்காணல்கள்தான். சமூக ஊடகங்களை மையப்படுத்தி ஒரு பிரச்சினையை எப்படி கொண்டு போகவேண்டும்? எப்படி அதனைத் தக்கவைக்க வேண்டும்? எந்த சுருதியை எப்போது ஏற்ற வேண்டும்? எந்த சுருதியை எப்போது இறக்க வேண்டும் என எல்லாவற்றையும் நன்கு கற்றுத்தேர்ந்து நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்த அர்ச்சுனாவால், அவரை மீறிய கதாநாயகத்தனத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. சில நூறுபேர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாகத் திரண்டதைக் கண்டதும், அவருக்காகத்தான் மக்கள் திரண்டிருக்கின்றனர் என நம்பினார். முகநூலில் பின்தொடர்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க தன்னைச்சுற்றி தமிழ் உலகமே நிற்பதாகக் கனவு கண்டார். அது வெறும் போலிக் கணக்குகள் என்பதை அறியாமலேயே, தான் தேர்தலில் நின்றால் அவர்கள் அனைவரும் தனக்கு வாக்களிப்பார்கள். தான் முதலமைச்சராவேன், நான் தமிழண்டா, யாழ்ப்பாணத் தமிழண்டா, எனது அப்பா தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனுக்கு அடுத்த நிலையில் இருந்தவர், நான் தலைவரின் ஆள் எனப் பல கதைகளை அடித்தார். வடக்கு ஊடகங்களுக்கு ஒரு கதையும், தெற்கு ஊடகங்களுக்கு இன்னொரு கதையுமாக அனல் பரப்பினார். சமநேரத்தில் அவர் மீது தொடரப்பட்ட வழக்குகள் ஐந்திலும் கோட்டை விட்டார். யாழ்ப்பாணத்திலிலுள்ள ஏனைய மருத்துவர்கள் மீது அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆதாரங்களைக் கொடுக்கத் தவறினார். இறுதியில் இணங்கிப்போகலாம் என அவரின் சட்டத்தரணி பொதுவெளியில் அறிவித்தார். இப்படியெல்லாம் தங்களது கதாநாயகன் தடுமாறுவதைப் பார்த்த பலர் அவரிடமிருந்து விலகிப்போனார்கள். மருத்துவர் அர்ச்சுனா தன்னுடைய தேவைக்காக மக்களின் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொள்கிறார், அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்து நிலைகளில் இலாபமீட்ட முயற்சிக்கிறார், அதனைத் தட்டிக்கேட்கும் ஆதரவாளர்களைத் தன் நட்புப் பட்டியலிலிருந்தே நீக்கிவிடுகிறார் என்கிற குற்றச்சாட்டுகளை அடுக்கிவிட்டு, அவரை விட்டு வெளியேறினர்.

தன்னைச்சுற்றிய ஆதரவு அலை சுருங்கிவருவதை அவதானித்த அர்ச்சுனா, அதனைத் தக்கவைத்துக்கொள்ள படாதபாடு படவேண்டியிருந்தது. மருத்துவ நிர்வாகவியல் படித்திருந்த போதிலும், அதனைத் துளியளவேனும் பின்பற்றாது, மன்னார் வைத்தியசாலைக்குள் நுழைந்தார். உண்மையில் அந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ளவராயிருப்பின், அதற்குள் அவர் தலையிடுவதற்கான நடைமுறைகள் வேறாக உள்ளன. ஆனால் அதனையெல்லாம் கவனமெடுக்காது, சில யூடியூபர்களோடு இரவு வேளையில் மருத்துமனைக்குள் நுழைந்து கதாநாயகத்தனம் காட்டத்தொடங்கினார். சாவகச்சேரியில் சாத்தியப்பட்ட அந்தக் கதாநாயகத்தனம் மன்னாரில் எடுபடவில்லை. இளந்தாயின் மரணத்தில் குற்றமிழைத்திருக்கும் மன்னார் மருத்துவமனை அர்ச்சுனா விடயத்தை சட்டரீதியாகக் கையாண்டு அவரை சிறைக்குள் தள்ளியிருக்கிறது. இவ்வளவு விடயங்களையும் அவதானித்த மக்கள் ,அர்ச்சுனா விடயத்தில் அவர் மீது பரிதாபப்படுகின்றனரே தவிர, யாராவது அவருக்கு நீதி வேண்டும், விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி வீதிக்கு வரவில்லை. தங்கள் கதாநாயகன் தண்டிக்கப்படுகிறான் எனப் பொங்கிப் பிரவாகித்துக் கோஷம் போடவில்லை. அனைவரும் சமூக வலைத்தளங்களில் ஏதாவது எழுதித் தீர்த்துவிட்டு தங்கள் அலுவல்களைப் பார்க்கப்போய்விட்டனர். இந்த நிலையை மக்கள் எடுப்பதற்குப் பிரதான காரணமே அர்ச்சுனாதான். தன்னை நோக்கி வந்த ஆதரவு அலையை தக்கவைத்திருக்க அவருக்குத் தெரியவில்லை. தான் முன்வைத்த பிரச்சினையைச் சரியாகக் கொண்டுசேர்க்கத் தெரியவில்லை. தான் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கே ஆதாரங்களைத் திரட்ட முடியவில்லை. அனைத்து மருத்துவர்களையும், அரசியல்வாதிகளையும், சட்டத்தரணிகளையும் பகைத்துக்கொண்டதன் விளைவு இது.

அதேவேளை புலம்பெயர் தமிழர்களில் பலபேருக்குத் தாயகத்தில் ஏதாவது குழப்பங்கள் நடந்துகொண்டே இருக்க வேண்டும் என்ற விருப்பமுண்டு. அதற்காக யார் முன்வந்தாலும், அவரின் கடந்தகாலம், அவர் ஏன் போராட்டத்தில் குதித்திருக்கிறார் என்கிற விடயங்களை அலசி ஆராயாமலே "செம்படிக்கும்" மனநிலையில் இருக்கின்றனர். அதற்காகப் பல போலி சமூக வலைதளக் கணக்குகளைப் பயன்படுத்தவும், சில டொலர்களை விட்டெறியவும் அவர்கள் தயாராக இருக்கின்றனர். தாயகத்தில் ஆரோக்கியமான ரீதியில் செய்யவேண்டிய பல விடயங்கள் இருப்பினும், அதனையெல்லாம் கவனியாது, இதுபோன்ற குழப்பகரமான விடயங்களில் அதிக நாட்டம் காட்டுகின்றனர். இந்தப் போக்கு கைவிடப்படவேண்டியது. அறிவுசார் கட்டமைப்புகளில் நன்கு வளர்ந்த நாடுகளில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்கள், இதுபோன்ற பிரச்சினைகள் வரும்போது, அந்தப் பிரச்சினை குறித்த ஆழ அகலங்களை உய்த்தறியவேண்டும். அதன் பின்னரே அது சரியானதா? பிழையானதா என்கிற முடிவுக்கு வரவேண்டும். அதனைவிடுத்து வெறும் உணர்ச்சிவயப்பட்டு ஒருவர் பின்னால் திரள்வதும், அவருக்கு ஆதரவளிக்கச் சொல்லி போலி சமூக வலைத்தளங்களில் கூச்சலிடுவதும், தாயகப் பிரச்சினைகளை மேலும் சிக்கலுக்குரியதாக்கும். தாயக மக்களை பிழையான அரசியல் வழித்தடத்தில் பயணிக்கச்செய்யும்.

அரச்சுனா பிழையாக வழிநடத்தப்பட்டமைக்கு யூடியூபர்கள், டிக்டொக் ஆகிய புதிய ஊடகக்காரர்களே பிரதான காரணம். தங்களின் தளங்களுக்கு அதிக பார்வையாளர்கள் வரவேண்டும், அதிக டொலர் உழைக்கவேண்டும் ஆகிய நோக்கங்களுக்காக அர்ச்சுனா தொடங்கிய பிரச்சினையை அதே இடத்தில் விட்டுவிட்டு, பார்வையாளர்கள் விரும்பிப்பார்க்கும் பொழுதுபோக்குத்தனமிக்க விடயங்கள் நோக்கி அவரை இழுத்துச் சென்றனர். உணர்வின் உச்சத்தில் நின்ற அர்ச்சுனாவும், உளறித்தள்ளினார். சமூக ஊடகங்களுக்கு நல்ல தீனி கொடுத்தார். எனவே அவர் தொடங்கிய பிரச்சினையை அவரே கைவிட்டுவிட்டு புதிதுபுதிதாக வேறு பல பிரச்சினைகளைக் கொண்டுவந்தார். பேசுபொருளாக்கினார். இப்படியாகத் தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டார்.



# எழுத்தாளனின் முக்கியமான கடமை சமூக சிந்தனையை மேம்படுத்துவதே!

## பிரிஸ்பேர்ன் நூல் வெளியீட்டில் ஐங்கரன் விக்கினேஸ்வரா உரை !







பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக (Mt Ommaney Library) மண்டபத்தில் ஓகஸ்ட் நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் திருமதி. ரதிதேவி கந்தசாமி (தாமரைச்செல்வி) ஆற்றினார். தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புறப் பாடினர்.

இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ்க்காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் திரு. செந்தில் குமரன் ஆற்றினார். பின்னர் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் திரு. சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர். துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார். இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை திரு. ரஜினிகாந்த் ஜெயராமன் தமிழக இலக்கிய ஆர்வலராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி சிறப்புற உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வினை பிரிஸ்பேர்ன் சுதா சிறப்புற தொகுத்து அளித்தார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற இந்நூல்கள் வெளியீட்டு இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார். தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது, என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் ஏற்புரையில் அவர் கூறியதாவது, புத்தக வாசிப்பு என்பது மிக முக்கியமானதாகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்துச் செல்லும். படிக்கப் படிக்க சிந்தனைகள் விரிவா-கும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்துச் செல்லப்படுவார்கள் என நம்பலாம். எழுத்தாளர்களின் எழுத்துகள் சமூக சிந்தனையை மேம்படுத்துகின்றன அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம். நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளமிக்க படைப்புகள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது - என இந்நிகழ்வில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டிருந்தார். ■



# இங்கிலாந்து புதிய பிரதமர் தீவிர வலதுசாரியா?

# பாலஸ்தீன எதிர்ப்பும்–ஈழத்தமிழர்க்கு ஆதரவும்?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா



இங்கிலாந்து தொழிற்கட்சியின் முன்னாள் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த இடதுசாரிப் போக்காளரான ஜெர்மி கோர்பின் (Jeremy Corbyn) பாலஸ்தீன ஆதரவுக் கொள்கைகளை முன்வைத்து செயற்பட்டு வந்தவர். அதன் விளைவாக அவர் தொழிற் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை அறிந்ததே.

**ஜெர்மி கோர்பின் பாலஸ்தீன ஆதரவு:**

ஜெர்மி கோர்பின், நடந்து முடிந்த ஜூலை 4 பொதுத் தேர்தலில் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். ஆனாலும் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் தொழிற்கட்சி வெற்றி பெறவில்லை. அங்கு மூத்த இடதுசாரி மற்றும் தீவிர பாலஸ்தீனிய சார்பு செயற்பாட்டாளரான ஜெர்மி கோர்பின் சுயேச்சையாக வெற்றி பெற்றமை தொழிற்கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

காஸாவில் தொடரும் இனப்படுகொலைக்கு எதிராக பெப்ரவரி 3, 2024 அன்று லண்டனில் நடந்த போராட்டத்தில் ஜெர்மி கோர்பின் பேசினார். அவ்வேளை தொழிற்கட்சியை "நேட்டோவின் கட்சி" (Party of NATO), எனவும் காரசாரமாக இஸ்ரேலின் பாலஸ்தீன நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் எதிர்ப்பைக் காட்டியுள்ளார்.

**கியர் ஸ்டார்மரின் இஸ்ரேல் ஆதரவு:**

காஸாவில் பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு ஆதரவு அளித்ததன் காரணமாக மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் கியர் ஸ்டார்மரின் கட்சிக்கு எதிராக திரும்பினர் எனக் கூறப்பட்டது. போர்நிறுத்தத்தை ஆதரிக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜெர்மி கோர்பின் வேண்டுகோள்களை விடுத்ததன் மூலம் போரை நிறுத்தும் கூட்டணியின் (Stop the War Coalition) மேடைகளில் கியர் ஸ்டார்மரின் தொழிற்கட்சியின் பெயரைக் குறிப்பிட்டு காரசாரமாக பல தடவை விமர்சித்துமுள்ளார்.

காஸாவில் பாரிய படுகொலைகள் மற்றும் இன அழிப்பு போருக்கு ஆதரவினை தொழிற்கட்சியின் தலைவர்கள் கொண்டிருப்பதால் ஜெர்மி கோர்பின் இப்போது தனித்து நின்று தொழிற்கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டுள்ளார்.

உண்மையிலே பாலஸ்தீன ஆதரவு காரணமாக தொழிற் கட்சியின் தலைவரான ஸ்டார்மர், ஜெர்மன் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை மறுத்ததுடன் கட்சியை விட்டும் நீக்கினார். கடந்த நான்காண்டு காலத்தில், தொழிலாளர் கட்சிக்குள் இருந்த இடதுசாரிகளை ஒழித்துக் கட்டுவதில் முனைப்புடன் செயல்பட்டவர்தான் தற்போது பிரதமராகப் பொறுப்பேற்ற அந்தக்கட்சியின் தலைவர் ஸ்டார்மர் ஆவார்.

ஜெர்மி கோர்பின் போன்றே, லேபர் கட்சியில் உள்ள மேலும் சில முற்போக்கு நபர்களுக்கும் போட்டியிட அனுமதி வழங்காமலும் கட்சியில் செயல்பட விடாமலும் லேபர் கட்சியின் திசையை மாற்றினார் ஸ்டார்மர். கட்சியின் காஸா கொள்கைகள் மீது அதிருப்தியுற்றதால் தங்களின் உயர் பதவிகளை விட்டு பல தலைவர்கள் வெளியேறி உள்ளனர்.

**ஜெர்மி கோர்பின் மகத்தான வெற்றி!**

இந்நிலையில், ஜெர்மி கோர்பின் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு லேபர் கட்சியின் மிகப்பெரும் இந்திய வம்சாவளி கோடீஸ்வரரான பிரபுல் நர்குண்டை (Praful Nargund) வீழ்த்தி மகத்தான வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வெற்றி மிகப்பெரும் வெற்றியாக சர்வதேச அளவில் பாராட்டப்படுகிறது.

இங்கிலாந்து நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி கியர் ஸ்டார்மர் தலைமையிலான லேபர் கட்சி (தொழிலாளர் கட்சி) வெற்றி பெற்றது. மொத்தமுள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளில் 412 தொகுதிகளில் வென்று அதீத பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்ந்தது லேபர் கட்சி.

தொழிலாளர் கட்சி எனப் பொருள்படும் லேபர் கட்சி, பெயரில் தொழிலாளர் கட்சி என்று இருந்தாலும், உண்மையில் அது ஒரு முதலாளித்துவக் கட்சிதான்.

அதில், கோர்பின் போன்ற இடதுசாரி முற்போக்குச் சிந்தனையாளர்கள் ஒரு தரப்பாக இருந்தனர். அவர்களை அந்தக்கட்சியில் உள்ள பெரும் பணக்கார அதிகார வர்க்க ஆதரவாளர்கள் ஒழித்துக் கட்டி வருகிறார்கள்.

**பாலஸ்தீன தனிநாடு எதிர்ப்பு :**

கடந்த 20 ஆண்டுகளில் லேபர் கட்சிக்கு இந்தத் தேர்தல் வெற்றியே சிறந்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. எனினும் இங்கிலாந்தில் இக்கட்சி வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புகள் இல்லை என்றே கூறப்படுகிறது.

குறிப்பாக, இஸ்ரேல் ஆதரவு, பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் மறுப்பது, போர், பொருளாதாரம், நேட்டோ ஆதரவு, இஸ்லாமிய வெறுப்பு, அதிதீவிர தனியார்மயமாக்கல், தொழிலாளர் விரோதப் போக்கு, புலம்பெயர்ந்தோர் வெறுப்பு என அனைத்திலும் இங்கிலாந்தின் கன்சர்வேடிவ் கட்சி, லேபர் கட்சி, தாராள ஜனநாயகவாதிகள் ஆகியோருக்கு இடையே பெரிய வேறுபாடுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற போதிலும், தொழிற்கட்சி சில பாலஸ்தீனிய சார்பு வேட்பாளர்களுக்கு எதிராகக் கடுமையாக போராடியது என்பதும் உண்மையே.

**முஸ்லிம் வாக்குகளில் பின்னடைவு:**

காஸா மீதான போரில் அதன் நிலைப்பாட்டின் மீதான அதிருப்தியின் மத்தியில், பிரிட்டனின் தொழிலாளர் கட்சி அதிக முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பிடத்தக்க தேர்தல் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

முஸ்லிம் மற்றும் பிற சிறுபான்மை குழுக்களின் ஆதரவை நீண்ட காலமாக நம்பி வந்த கட்சி, 10% க்கும் அதிகமான மக்கள் முஸ்லிம்களாக அடையாளம் காணும் இடங்களில் அதன் வாக்கு பாரியளவில் குறைந்துள்ளது.

காஸாவில் சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்று தொழிற் கட்சி கூறினாலும், பிரிட்டனின் மக்கள்தொகையில் 6.5% ஆக இருக்கும் 3.9 மில்லியன் முஸ்லிம் மக்களை சாந்தப்படுத்தி, மறுபுறம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான இஸ்ரேலின் உரிமையையும் அது ஆதரித்துள்ளது. அதேவேளை பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது என இக்கட்சி கூறினாலும், அதற்கான திட்டவட்டமான அறிவிப்பை இதுவரை அறிவிக்கவில்லை.

**தொழிற்கட்சியின் தமிழ் ஆதரவு :**

இலங்கையில் சுயநிர்ணயம், அமைதி மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் செய்த தியாகங்களை நினைவுகூர வேண்டியது அவசியம் என தற்போதய புதிய பிரதமரான கியர் ஸ்டார்மர் (Keir Starmer) கடந்த மே மாதம் தெரிவித்திருந்தார். பிரிட்டிஷ் தமிழர் பேரவை (BTF) ஏற்பாடு செய்திருந்த ட்ரஃபல்கர் சதுக்கத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்விலேயே அப்போதைய தொழிற்கட்சியின் தலைவரும், தற்போதைய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் (Keir Starmer) இவ்வாறு தெரிவித்திருந்தார்.

'தமிழர் தாயகத்தில் உயிரிழந்த தமிழ் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஒரு சர்வதேச நீதிப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்' எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் 2022 ஆம் ஆண்டில், தற்போதைய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர், தமிழர்களுக்கு ஆதரவாக நிற்கவேண்டுமெனவும், அட்டூழியங்களைச் செய்த குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐ.நா உயர் ஆணையரின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்க வேண்டுமெனவும் இங்கிலாந்து அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

"அனைத்து பெரும் அட்டூழியக் குற்றங்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்களின் குற்றவாளிகள் பொறுப்புக்கூறப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

உண்மையான அமைதி மற்றும் நீதிக்காக தமிழ் மக்களுக்காக தொழிற் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் 2022இல் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அகம், புறம், சங்க(ம)ம்

## கோட்டு இடை வைத்த கவளம் போல

சென்ற வருடம் வெளியான யோகிபாபு நடித்த 'லக்கிமேன்' திரைப்படத்தில் ஒரு காட்சி உண்டு. அதாவது யோகி பாபு அவரது வீட்டுத் தேவைக்காக கடன் கேட்டு பலரிடம் செல்வார். அவர் வருவதற்கு முன்னரே பலர் எங்கே உதவி கேட்டு விடுவாரோ என்று நழுவி ஓடி விடுவர். ஒரு வட்டிக்கடைக்காரரிடம் சென்று கடன் கேட்கும்போது முதலில் ”அடுத்த நாள் வாருங்கள் ” என்றும் பிறகு மூன்று நாள் ,ஐந்து நாள் மற்றும் 20 நாட்கள் கழித்து வாருங்கள் என்று அலைக்கழிய விட்டுவிட்டு இறுதியில், “கடன் எல்லாம் கிடையாது . போனமுறை கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்க வந்த எங்கள் ஆட்களை இப்படித் தானே அலையவைத்தாய் .அதற்கு பதிலடி தான் இது “ என்று யோகிபாபுவை வெறுப்பேற்றிவிடுவார் . எனக்கொரு நண்பர் இருக்கிறார் .பெயரை குறிப்பிடத் தேவையில்லை. அவரை எப்பொழுது தொலைபேசியில் அழைத்தாலும் . “எனக்கு நான்கு நாட்களாக உடம்பு சரியில்லை. வீட்டில் ஏகப்பட்ட வேலைகள் .அதைச் சரிசெய்ய நிறையப் பணம் தேவை. ஊரில் நிறையக் கடன் .எப்படி கட்டப்போகிறேனோ தெரியவில்லை?” என்று பஞ்சப்பாட்டு பாடுவார். அதாவது யாராவது உதவி கேட்கும் முன்னரே,” நானே மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன் என்னால் யாருக்கும் உதவ முடியாது” என்பதைக் குறிப்பில் உணர்த்தும் பண்பினர். இந்த இரண்டு சம்பவங்களும் நமக்கு உணர்த்துவது என்னவென்றால் பொதுவாகவே இப்போதுள்ளவர்களுக்கு மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனநிலை இல்லை.அப்படியேயிருந்தாலும் அதற்கு பின்னால் பல்வேறு சாதகவலைகள் பின்னப்பட்டிருக்கும்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.

இந்தத் திருக்குறளில் வருவது போன்று கைம்மாறு கருதாமல் உதவி செய்யும் மனிதர்களை காண்பது மிகவும் அரிது. ஆனால் சங்ககாலத்தில் வறியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல்கள் இருந்திருக்கின்றனர். ஆதலால் அப்பொழுது பொய்க்காமல் மழை பெய்திருக்கிறது. இந்தப் பாடலில் ஔவையார் ,வள்ளல் அதியமானின் உதவும் தன்மையை போற்றி பாடியிருக்கிறார்.

பாடியவர்: ஔவையார்

பாடப்பட்டோன்: அதியமான் நெடுமான் அஞ்சி.

திணை: பாடாண் திணை - பாடுதற்குரிய ஓர் ஆண் மகனின்(வேந்தர்) சிறப்பியல்புகளைக் கூறி, அவனது வீரத்தையும் புகழையும் குடிப்பெருமையையும் கொடை வள்ளன்மையையும் கல்வியறிவையும் செல்வத்தையும் குறித்துப் புகழ்ந்து பாடுவது. ஆண்மகனின் ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண் திணை ஆகும்.

துறை : பரிசில்கடா நிலை - பரிசில் தரும்படி வேண்டிக் கொண்டு வாயிலில் நிற்பதைக் குறிக்கும். கடாநிலை என்பது கடைநிலை என்பதன் திரிபு. கடை என்பது அரண்மனை வாயில்.

ஒரு நாள் செல்லலம் இரு நாள் செல்லலம்
பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்,
தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ
இழை அணி யானை இயல் தேர் அஞ்சி
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும், நீட்டாதுஆயினும், களிறு தன்
கோட்டு இடை வைத்த கவளம் போலக்
கையகத்தது் அது பொய் ஆகாதே
அருந்த ஏமாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டர் வாழ்க, அவன் தாளே!

ஒருநாள் இல்லை. இருநாள் இல்லை . பல நாட்கள் திரும்ப திரும்ப அவனிடம் உதவி கேட்டு சென்றாலும், முதல் நாளில் கண்டபோது எவ்வாறு இன்முகத்துடன் உதவி செய்தானோ அதைப்போன்று எந்நாளும் இன்முகத்துடன் உதவி செய்யும் பண்பினன் அதியமான் . மிகப் பெரிய யானையையும், அழகிய நீண்ட பருத்த தேரும் உடையவன்!. எவ்வாறு யானைக்கொம்பினிடையே வைக்கப்பட்ட சோற்றுக் கவளம், அதனை விட்டு ஒரு நாளும் தவறாது யானையின் பசியை ஆற்றும் அல்லவா. அது போலவே அதியமான் தரும் பரிசில் நம் கையிலேயே உள்ளது. அது என்றும் தப்பாதது! நெஞ்சே! நீ வருந்தாதே! வாழ்க அவனது புகழ்!


ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இந்தப் பாடலில் வரும் உவமையை நாம் கவனிக்க வேண்டும். யானைக்கு கொடுக்கப்பட்ட கவளம் அதன் தந்தத்துக்கிடையே இருக்கும். அதனை யாரும் கவர்ந்து செல்ல மாட்டார்கள். அதே போன்று அதியமான் தம்மை நாடி வரும் புலவர்களுக்கு கொடுக்க வேண்டிய பரிசிலை தனியாக எடுத்து வைத்திருப்பான். கண்டிப்பாக கொடுத்துவிடுவான் என்கிறார். 'யானை போன்று செல்வாக்கு கொண்டவர்கள் தன் போன்ற புலவர்கள்' என்று ஔவையார் குறிப்பிடுகிறார். இந்தப் பாடல் பரிசில் கடா நிலைத்துறையில் வருகிறது. என்ன காரணத்தாலோ உதவி கேட்டு வந்த ஔவை, அதியமானின் அரண்மனையின் வாசலில் தடுத்து வைக்கப்படுகிறாள். அப்பொழுது வருந்திய தனது மனத்தைத் தேற்றிக்கொள்வதற்காக அவர் இயற்றிய பாடல். பரிசில் பெறுவதில் சிறிது தாமதமானாலும் கண்டிப்பாக அதியமானின் உதவி கிடைத்துவிடும் என்பதில் உறுதியோடிருக்கிறார். உதவி கேட்டு வருகிறவருக்கு உதவி கிடைக்கவில்லை. காலம் கடந்தாலும் தனக்கு உதவி கண்டிப்பாகக் கிடைத்துவிடும் என்கிறார். ஔவை, அதியமானின் மேல் கொண்டிருந்த நம்பிக்கை வியக்க வைக்கிறது.



# பங்களாதேஷ்; ஆட்சி மாற்றமும் பொருளாதார வீழ்ச்சியும்




● ஐங்கரன் விக்கினேஸ்வரா

தற்போதைய மாணவர் போராட்டம் பங்களாதேஷ் தலைநகர் டாக்கா பல்கலைக்கழகத்தில் இருந்தே தொடங்கியது. இதே டாக்கா பல்கலைக் கழக வளாகம் 1971 மார்ச் 25, 26 ஆகிய இரு நாட்களும், மனித குலம் கண்டிராத மிகக்கோரமான, இரக்கம் அற்ற இனப்படுகொலையைச் சந்தித்தது.

பல்கலைக்கழகத்தின் புகழ் பெற்ற பேராசிரியர்களும், மாணவர்களும்1971 மார்ச் 26 அதிகாலை, பல்கலைக்கழக வளாகத்திலே, பாகிஸ்தான் ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்போது பங்களாதேஷில் ஜூலை மாத தொடக்கத்தில் நாடு முழுவதும் பல வாரங்களாக மாணவர்களின் புரட்சி சொந்த நாட்டின் அரசையே ஆட்டங்காண வைத்துள்ளது. அதேவேளை அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளது.

நீண்ட காலமாக பங்காளதேஷ் ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக அனைவராலும் பார்க்கப்பட்டது . ஆனால் இன்று ஆசியாவில் எழுச்சி பெறும் புலிகளில் ஒன்றாக கருதப்படுகிறது. தென்னாசியப் பொருளாதாரப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு மேலாக உயரும் நிலையில் இருந்த வங்கதேசம் மீண்டும் பாரிய பொருளாதர வீழ்ச்சியை அடைந்துள்ளது.

### மாணவர் எழுச்சியும் பொருளாதர வீழ்ச்சியும்:

தற்போது நாட்டை விட்டு வெளியேறிய பிரதமர் ஷேக் ஹசீனா இவ்வருடம் ஜனவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் 41.8ழு வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின், பல வருடங்களாகச் சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டை மீண்டும் அமுலாக்கம் செய்யும் முயற்சியில் இறங்கினார்.

இதன் விளைவே ஆட்சியை இழந்து, பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். மாணவர்களின் தொடர் போராட்டங்களால் பங்களாதேஷ் எப்போதும் இல்லாத வகையில் அமைதியற்ற நாடாக மாறியது. தினமும் பலி எண்ணிக்கை அதிகரித்தது.இறுதியில் மாணவ போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லமான ஹணபபானுக்குள் (புயயெடிாயடியெ) நுழைந்து மொத்த வீட்டையும் சூறையாடி அழித்தனர். ஆயினும் இதற்கு முன்பே பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அவருடைய சகோதரி ஷேக் ரெஹானாவுடன் வங்கதேசத்தை விட்டு ஹெலிகொப்டர் மூலம் இந்தியாவுக்குத் தப்பி வெளியேறி உள்ளார்.

இவை அனைத்திற்கும் முக்கியமான காரணமாக இருந்தது அந்நாட்டில் அமுலிலிருந்த சர்ச்சைக்குரிய வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டு முறை தான், இதை எதிர்த்து மாணவர்கள் தொடங்கிய போராட்டமே நாடு தழுவிய நெருக்கடியாக மாற்றமுற்றது.

### சர்ச்சைக்குரிய இடஒதுக்கீடு:

சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டால், பங்களாதேஷ் முழுவதும் மாணவர்கள் எழுச்சியால் அரசியல் வன்முறை வெடித்தது.

ஜூலை 31 வரையில் இந்த வன்முறை மூலம் பங்களாதேஷ் பொருளாதாரத்திற்கு 10 பில்லியன் டொலர் மதிப்பிலான இழப்பு ஏற்படும் என கணிக்கப்பட்டது.

இதனால் அந்நியச் செலாவணி இருப்புகளை உயர்த்தப் போராடும் பங்களாதே/க்கு 20 முதல் 40 பில்லியன் டொலர் வரையில் பாதிப்பு ஏற்பட கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க வேலை ஒதுக்கீட்டிற்கு எதிரான மாணவர் போராட்டத்தை அடக்க ஊரடங்கு உத்தரவு மற்றும் இணைய முடக்கம் போன்றவற்றின் மூலம் பங்களாதேஷ் பொருளாதாரத்தில் கூ10 பில்லியன் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டது.



ஆனால் தற்போது நிலைமை மொத்தமாக கைமீறியுள்ளது. தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இராணுவ ஆட்சி எழுந்துள்ளது.

### பொருளாதார வீழ்ச்சி:

வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டொலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், தற்போதய மாபெரும் பிரச்சினையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாகவே இருக்கும்.

மாணவர் போராட்டங்களால் தற்போது 40 பில்லியன் டொலர் வரையில் அந்நாட்டின் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைந்து ஒரு ஆபத்தான நிலையில் உள்ள வேளையில் அந்நாட்டின் அரசியலில் ஏற்பட்டு உள்ள மாற்றங்கள் பெரும் அதிர்ச்சியை அந்நாட்டு தொழிலதிபர்களுக்குக் கொடுத்துள்ளன. ஜூன் மாதம் பங்களாதேஷ் நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பு 21.8 பில்லியன்டொலர் மட்டுமே.

பங்களாதேஷ் நாட்டின் அரசியல் எந்த அளவுக்கு வேகமாக சரி செய்யப்படுகிறதோ அந்த அளவுக்கு அந்நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள சரிவு குறைக்கப்படும் என்பது முன்னைய பாடமாகும்.

### முஜிபுர் ரஹ்மான் சிலை உடைப்பு:

தற்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் சொந்த நாட்டு மக்களின் புரட்சியால் நாட்டை விட்டே தப்பி ஓடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் வங்கத்தின் தந்தை முஜிபுர் ரஹ்மானின் சிலைகள் பல இடங்களில் தகர்க்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் நாட்டை உருவாக்கிய, வங்கதேச விடுதலைக்கு காரணமான தேசத் தந்தை எனப் போற்றப்படும் முஜிபுர் ரஹ்மானின் சிலைகள் பல இடங்களில் தகர்க்கப்பட்டமை என்பது மாணவர்களின் கோபாவேசத்தை வெளிப்படுத்தி உள்ளது.

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அற்புதமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். இருப்பினும் செலவுகள் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் வார்த்தைகளில் கவனம் செலுத்துவது நல்லது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு துர்க்கை அம்மனை வழிபட வேண்டும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சாதகமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிக அளவு பண வரவு ஏற்படும். ஒரு சிலருக்கு திடீர் பணவரவு ஏற்படுவதற்குரிய வாய்ப்புகளும் உள்ளது. சொத்துகள் வாங்கும் அமைப்பு உள்ளது. கணவன் மனைவிக்கு இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை அதிகரிக்கும். திருமண முயற்சியில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். வேலையைப் பொறுத்தவரை வேலை சுமை அதிகமாக இருக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கும் நல்ல செய்தி கிடைக்கும. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு மகாலட்சுமியை வழிபட வேண்டும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மாற்றங்கள் நிறைந்த மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தை பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு இருக்கும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் கைக்கு வந்து சேரும். மருத்துவ செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு கள் உள்ளது. கவனம் தேவை. கணவன்-மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். வேலையைப் பொறுத்தவரை வேலை சுமை அதிகமாக இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வ தற்கு மகாவிஷ்ணுவை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிம்மதி பெருமூச்சு விடும் மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததைவிட அதிக அளவு பண வரவும் அதிர்ஷ்டமும் உண்டாகும் சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகளும் மனக்கசப்புகளும் நீங்கும். வேலையைப் பொறுத்தவரை நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த சலுகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. புதிதாக வேலை தேடுபவருக்கு சாதகமான காலமாகத் திகழ்கிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சிவபெருமானையும் பார்வதி அம்மனையும் வழிபட வேண்டும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஏற்ற இறக்கம் நிறைந்த மாதமாகத் திகழப்போகிறது. ஒரு சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்படக்கூடும். பொருளாதா ரத்தைப் பொறுத்தவரை திடீர் பணவரவு ஏற்படுவதற்குரிய வாய்ப்புகளும் உள்ளது. அதே சமயம் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் படிப்படியாகக் குறையும். திருமணத்திற்காக முயற்சி செய்பவர் களுக்கு திருமண யோகம் உண்டாகும். தொழில் ரீதியாக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியைத் தரும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சூரிய பகவானை வழிபாடு செய்ய வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிகாரர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டம் நிறைந்த மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்ததை விட அதிக அளவு பண வரவு ஏற்படும். இருப்பினும் செலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்லும். குடும்பத்தில் பொறுமையாகவும் நிதான மாகவும் செயற்படுவது மிகவும் முக்கியம். வேலையை பொறுத்தவரை வேலைச் சுமை அதிகமாக இருக்கும். அதை எந்த அளவிற்கு சிறப்பாக செய்தாலும் அதனால் எந்தவித பலனும் ஏற்படாத ஒரு சூழ்நிலை உண்டாகும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு அர்த்த நாரீஸ்வரரை வழிபட வேண்டும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் லாபகரமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். ஒரு சிலருக்கு திடீர் பணவரவு ஏற்படு வதற்குரிய வாய்ப்புகளும் உண்டாகும். சேமிப்புகள் உயர்வதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. திருமணத்திற்காக முயற்சி செய்பவர்கள் இந்த மாதத்தை தவிர்ப்பது நல்லது. அறிமுகம் இல்லாத நபர்களுடன் பழகுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் சங்கடங்கள் உண்டாகும். ஆடம்பர செலவுகள் எதையும் செய்வதை தவிர்க்க வேண்டும். உடல் ஆரோக்கி யத்தில் கவனம் தேவை. வேலையில் முழுக் கவனம் செலுத்தி செய்வது இன்னும் பல அனுகூலமான தன்மையை கொடுக் கும இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு அம்பாளை வழிபட வேண்டும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். பூர்வீக சொத்துக்களால் பணவரவு ஏற்படுவதற்குரிய வாய்ப்புகளும் உள்ளது. முயற்சிகள் அனைத்தும் வெற்றியைத் தரும். பேரும் புகழும் கிடைக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த நல்ல காரியங்கள் நடைபெறும். வீடு கட்டும் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு சாதகமான மாதமாக அமையும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு முருகப்பெருமானை வழிபாடு செய்ய வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முன்னேற்றகரமான மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு ஏற்படும். அதற்கு இணையாக செலவுக ளும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. கூடுதல் வருமானம் பெறுவதற்கு அதிகளவில் முயற்சி செய்து கடன்களை அடைப்பதில் கவனம் செலுத்துவீர்கள். பூர்வீக சொத்தில் இருக்கக்கூடிய சிக்கல்கள் நீங்கும். கணவன்- மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்ப தால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நன்மையை தரும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்வதற்குரிய வாய்ப்புகள் உண்டாகும். உடல் ஆரோக்கி யத்தில் இருந்து வந்த பாதிப்புகள் நீங் கும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஆசைகள் நிறைவேறும் மாதமாகத் திகழப் போகிறது. நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றிகள் கிடைக்கும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிக அளவு பணவரவு ஏற்படும். கடன் தொல்லைகள் அனைத்தும் நீங்கும். கணவன்-மனைவிக்கிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விலகும். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. வேலையைப் பொறுத்தவரை சாதகமான மாதமாகத் திகழப்போகிறது. புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு விரும்பிய வேலை கிடைக்கும். கடின உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மன நிம்மதி பெறும் மாதமாகத் திகழப் போகிறது. இதுவரை இருந்து வந்த நெருக்கடிகள் அனைத்தும் நீங்கும். பிரச்சினைகள் விலகும். ஒரு சிலருக்கு அதிர்ஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. தன்னம் பிக்கை குறையாமல் செயல்படுவதன் மூலம் பல அற்புதமான பலன்களை பெற முடியும். பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவிற்கு லாபம் கிடைக்கும். செலவுக்கேற்ற வரவு உண்டா கும். சொத்துக்கள் வாங்குவதற்குரிய வாய்ப்புகளும் உண்டாகும வாழ்க்கைத் துணையுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. விட்டுக்கொடுத்து செல்வது நன்மையைத் தரும். வேலையை பொறுத்தவரை சாதகமற்ற சூழ்நிலை நிலவுகிறது.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மங்களகரமான மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படாது. அதே சமயம் தேவையில்லாத வீண் விரயங்களும் ஏற்படுவதற்கு வாய்ப்பு கள் இல்லை. குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். திருமணம் கைகூடும். வருமானத்தை சேமிப்பாக மாற்ற முயற்சி செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வேலையைப் பொறுத்தவரைவேலை சுமை அதிகமாக இருக்கும். அதை கவனத்துடனும் திறமையுடனும் செய்து முடிப்பதன் மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

# வாசகர்களின் வாசல்களை தேடிவரும் எதிரொலி

**ஆஸ்திரேலியாவில் வெளிவரும்**
**ஒரே தமிழ்பத்திரிகை**
**உங்கள் வாசல்களுக்கு தபால் மூலம் தேடிவரும் வாய்ப்பு**

**வருடாந்தம்**
**$120+GST**

**தொடர்புகளுக்கு:**

தொ.பே: 0420810355, Email: ethirolimelbourne@gmail.com



Transco™ CARGO

THIS YEAR CHRISTMAS WILL BE AWESOME

| Month | Final Cut Off Date | Estimated Arrival Date |
|---|---|---|
| August | 2024 -08 - 03 | 2024 - 09 - 13 |
| August | 2024 - 08 - 10 | 2024 - 09 - 20 |
| August | 2024 - 08 - 17 | 2024 - 09 - 27 |
| August | 2024 - 08 - 24 | 2024 - 10 - 04 |
| August | 2024- 08 - 31 | 2024 - 10 - 11 |
| September | 2024 - 09 - 07 | 2024 - 10 - 18 |
| September | 2024 - 09 - 14 | 2024 - 10 - 25 |
| September | 2024 - 09 - 21 | 2024 - 11 - 01 |
| September | 2024 - 09 - 28 | 2024 - 11 - 08 |
| October | 2024 - 10 - 05 | 2024 - 11 - 15 |
| October | 2024 - 10 - 12 | 2024 - 11 - 22 |
| October | 2024 - 10 - 19 | 2024 - 11 - 29 |
| October | 2024 - 10 - 26 | 2024 - 12 - 06 |
| November | 2024 - 11 - 02 | 2024 - 12 - 13 |
| November | 2024 - 11 - 09 | 2024 - 12 - 20 |
| November | 2024 - 11 - 16 | 2024 - 12 - 27 |
| November | 2024 - 11 - 23 | 2025 - 01 - 03 |
| November | 2024 - 11 - 30 | 2025 - 01 - 10 |
| December | 2024 - 12 - 07 | 2025 - 01 - 17 |
| December | 2024 - 12 - 14 | 2025 - 01 - 24 |
| December | 2024 - 12 - 21 | 2025 - 01 - 31 |



Now We do Air Tickets



Transco TRAVELS

LIONXPRESS

Your Essentials to Sri Lanka
Within 7 Days?



45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU